# மாணவர்களுக்கு

# நபிகள் நாயகம் வரலாறு

# மாணவர்களுக்கு நபிகள் நாயகம் வரலாறு

நபிகள் நாயகம் அவர்களின் வரலாற்றில் நிகழ்ந்த மாணவர்களுக்கு அறிவுரை கூறி நல்வழிப்படுத்துகிற 56 நிகழ்ச்சிகள்.

எம்கே.ஈ. மவ்லானா

முல்லை பிஎல். முத்தையா

பிருந்தாவனம்

323/10, கதிரவன் காலனி,
அண்ணா நகர் மேற்கு,
சென்னை - 600 040

# நூல் விளக்கக் குறிப்புகள்

| | | |
|---|---|---|
| நூலின்பெயர் | : | மாணவர்களுக்கு நபிகள் நாயகம் வரலாறு |
| தொகுத்தவர்கள் | : | எம்கே.ஈ. மவ்லானா<br>முல்லை பிஎல்.முத்தையா |
| வெளியீட்டு நாள் | : | நவம்பர் 1999 |
| பதிப்பு | : | முதல் பதிப்பு |
| பதிப்புரிமை | : | ஆசிரியர்களுக்கே |
| தாள் | : | 10.5 கி.கி. வெள்ளைத்தாள் |
| நூலின் அளவு | : | 18.5 செ.மீX12.5 செ.மீ |
| எழுத்து | : | 13 புள்ளி |
| பக்கங்கள் | : | 96 |
| வெளியிடுவோர் | : | பிருந்தாவனம்<br>323/10, கதிரவன் காலனி<br>அண்ணா நகர் மேற்கு,<br>சென்னை-40 |
| நூல் கட்டு | : | தாள் அட்டை |
| பொருள் | : | நபிகள் நாயகம் அவர்களின் வரலாறு |
| அச்சிட்டோர் | : | ஸ்நேகா ஆப்செட்<br>சென்னை-14 |
| விலை | : | ரூ 18-00 |

## பதிப்புரை

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் உலகிற்குப் புரட்சியை தோற்றுவித்தார்கள்; புதுமையான தத்துவக் கருத்துக்களையும் அறக் கோட்பாடு களையும் உருவாக்கி தாமே அதற்கு முன் மாதிரியாகத் திகழ்ந் தவர்கள்.

நபிகள் நாயகம் அவர்களின் வரலாறு என்பது மிகப்பெரிய பொக்கிஷம் ஆகும்.

அப் பொக்கிஷத்திலிருந்து மாணவர் களுக்கு அறிவுரை கூறி நல்வழிபடுத்துகிற 56 நிகழ்ச்சிகளை தொகுத்து நூலாக வழங்கியுள்ளோம்.

பதிப்பகத்தார்

## 1. புன்சிரிப்போடு குழந்தை வளர்ந்தது

பெருமானார் அவர்களின் குழந்தைப் பருவம் பாட்டனார் அப்துல் முத்தலிப் அவர்களின் ஆதரிப்பில் இருந்தது.

அப்துல் முத்தலிப் அவர்களின் உடல் முதுமையால் நலிந்து, தளர்ந்தது.

தாம் உயிரோடிருக்கும் பொழுதே, குழந்தையைத் தக்க பாதுகாப்பில் விட்டுவிடக் கருதினார். அதற்காக தம்முடைய புதல்வர்களை அழைத்து ஆலோசித்தார்.

அப்பொழுது, முதலாவதாக அபூலஹப், அக்குழந்தையின் பராமரிப்பை தாம் ஏற்றுக் கொள்வதாகக் கூறினார்.

"நீயோ பணக்காரன்; கடின. உள்ளம் உடையவன்; தாய் தந்தையற்ற இக்குழந்தையை மகிழ்வோடு வளர்க்க உன்னால் இயலாது" என்று கூறிவிட்டார் அப்துல் முத்தலிப்.

ஹல்ரத் அப்பாஸ் தாம் வளர்ப்பதாகக் கூறினார்.

"உனக்குக் குழந்தைகள் அதிகம். அவற்றோடு இக்குழந்தையை எவ்வாறு ஆதரிக்க இயலும்?" என்று கூறிவிட்டார்.

இறுதியாக, அபூதாலிப் அவர்கள், ‘‘நான் பணக்காரன் அல்லன் எனினும் இக்குழந்தையை வளர்க்கும் நற்காரியத்துக்கு நான் தகுதியானவன் என்று நீங்கள் கருதினால், நான் மனப்பூர்வமாக அப்பொறுப்பை ஏற்றுக்கொள்கிறேன்" என மிகப் பணிவோடு வேண்டிக்கொண்டார்.

அதைக்கேட்டதும், ‘‘இதற்கு நீ பொருத்த மானவன் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை. ஆயினும் அந்தக்குழந்தையே அதைத் தீர்மானிக் கட்டும்" என்று கூறி, பெருமானார் அவர்களை அருகில் அழைத்து, ‘‘அருமைக் கண்மணியே! எனக்கோ வயதாகிவிட்டது. உடலும் தளர்ந்து விட்டது. இனி அதிக நாட்கள் உயிரோடு இருக்கமாட்டேன். ஆகவே, நம் குடும்பத் தவர்களான, இவர்கள் உம்மைப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்கத் தயாராயிருக்கின்றனர். இவர்களில் எவருடன் இருக்க நீர் விரும்புகிறீர்?" என்று கேட்டார் முதியவர்.

புன்சிரிப்புத் தவழ, அபூதாலிப் அவர்கள் மடியில் போய் உட்கார்ந்தார்கள் பெருமானார்!

உடனே அப்துல் முத்தலிப் கண்களில் நீர் தளும்ப, தம் மகனை நோக்கி, ‘‘அபூதாலிபே!

தாய் தந்தையற்ற இக்குழந்தைக்குப் பெற்றோரின் அன்பும், பாசமும் இன்னது என்று தெரியாது. ஆகையால், இக்குழந்தையை, ஒரு குறையும் இன்றி, மகிழ்வோடு வளர்த்து வருவாயாக!" என்றார்.

அதன்பின் சில நாட்களில் அப்துல் முத்தலிப் மனஅமைதியோடு காலமானார்கள்.

## 2. இணைபிரியாத வளர்ப்பு

அபூதாலிப் அவர்களின் ஆதரிப்பில் பெருமானார் அவர்கள் வளர்ந்து வந்தார்கள்.

தம்முடைய பிள்ளைகளுக்கும் மேலாக பெருமானார் அவர்களை அன்போடு நேசித்ததோடு, இணைபிரியாமல் கவனித்துக் கொண்டார்.

தூங்கும்போது கூடத் தம்முடனே தூங்க வைத்துக்கொண்டார்.

வெளியே போவதாயிருந்தால், கூடவே அழைத்துச் செல்வார். இவ்வாறு கண்ணும் கருத்துமாக இருந்தமையால் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிவதே இல்லை.

## 3. விளையாட்டிலே விருப்பம் இல்லை

பெருமானார் அவர்கள் இளம்பருவத்தில், தனித்திருந்து சிந்தனையிலே ஆழ்ந்து விடுவார்கள். மற்றப் பிள்ளைகளைப் போல் விளையாட்டுகளிலே நாட்டம் கொள்வதில்லை.

பெருமானார் அவர்களின் இளம்பருவத் தோழர்கள் ஒரு சமயம் தங்களுடன் விளையாட வருமாறு அழைத்தார்கள்.

"மனிதன் மேலான காரியங்களுக்காகப் படைக்கப் பட்டிருக்கிறானே தவிர, விளையாட்டுக் காரியங்களில் ஈடுபடுவதற்காகப் படைக்கப் படவில்லை" என்று கூறி மறுத்து விட்டார்கள்.

## 4. கல்வி பயிலாமல் அறிவுக்கூர்மை

இளமையிலே அறிவுக்கூர்மையும், சிறந்த ஆராய்ச்சியும் மிளிர்வதற்கான அறிகுறிகள் பெருமானார் அவர்களிடம் நிரம்பக் காணப் பட்டன. எந்தக் கல்விக்கூடத்திலோ அல்லது எந்தத் தனி ஆசிரியரிடத்திலோ பெருமானார் கல்வி பயின்றதில்லை.

இதனாலேயே பெருமானார் அவர்களுக்குக் கல்வி கற்காதவர்' (உம்மி) என்ற பெயர் உண்டாயிற்று.

## 5. மழைக்காகப் பிரார்த்தனை

ஒரு சமயம், மக்காவில் கொடிய பஞ்சம் நிலவியது. மக்கள் அனைவரும் துன்புற்றார்கள்.

அதை அறிந்த அபூதாலிப், பெருமானார் அவர்களை ஒரு பரந்த வெளிக்குக் கூட்டிக் கொண்டுபோய், மழை பெய்வதற்காகப் பிரார்த்தனை செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

அன்புடையோனும் அருளுடையோனுமான எல்லாம் வல்ல ஆண்டவன் சமூகத்திலே, பெருமானார் மழை பொழியப் பிரார்த்தனை செய்தார்கள். அப்பொழுது அவர்களுக்கு வயது பத்து!

உடனே மழை பொழிந்தது! பஞ்சம் அகன்றது! நாடு செழிப்படைந்தது.

## 6. ஆண்டவன் கட்டளை

பெருமானார் அவர்கள் ஹலரத் ஹலிமா அவர்களிடம் வளர்ந்து வரும்பொழுது வயது மூன்று.

ஒருநாள், அன்னை ஹலிமாவின் மக்களைக் காணாமையால், பெருமானார் அவர்கள், “அருமை அன்னையே என் சகோதர்களைக்

காணவில்லையே, அவர்கள் எங்கே!” என்று கேட்டார்கள்.

“மகனே! அவர்கள் பகல் நேரங்களில் ஆடுகளை ஓட்டிக்கொண்டுபோய் மேய்த்து, இரவில் வீடு திரும்புவார்கள்” என்று கூறினார் ஹலிமா.

“தாயே! அந்த வேலையைச் செய்வதற்கு என்க்குத் தகுதி இல்லையா?” எனக் கேட்டார்கள் பெருமானார்.

மறுநாள் முதல், பெருமானாரும் மற்ற பிள்ளைகளோடு ஆடு மேய்த்து வந்தார்கள்.

ஹல்ரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் காலம் முதல் நபிமார்கள் ஆடு மேய்த்து வந்திருக்கின்றனர்.

முன்னர் தோன்றியிருந்த நபிமார்களிடம் உள்ள இந்த அம்சம் பெருமானார் அவர்களிடமும் அமையப்பெறவேண்டும் என்பது ஆண்டவன் கட்டளை போலும்!

## 7. கிறிஸ்துவத் துறவியின் பாராட்டு

ஒருசமயம் வியாபாரத்தின் பொருட்டு, ஷாம் தேசத்துக்குப் புறப்படத் தீர்மானித்தார்கள் அபூதாலிப்.

அப்பொழுது, பெருமானார் அவர்கள் தம்மையும் உடன் அழைத்துச் செல்லுமாறு கேட்டுக்கொண்டார்கள். அப்பொழுது அவர் களுக்கு வயது பன்னிரண்டு.

அபூதாலிப் மறுக்காமல் பெருமானாரையும் கூட்டிக்கொண்டு வியாபாரக் கூட்டாத்தாருடன் ஷாம் தேசத்துக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

அந்தக் கிறிஸ்துவத் துறவி வேதங்களைக் கற்று, அறிந்து, ஆராய்ந்தவர். எதிர்காலத்தில் தீர்க்கதரிசி ஒருவர் தோன்றுவார் என்பதையும் அவ்வாறு தோன்றுவதற்கான அறிகுறிகளையும், அவ்வேதங்களில் குறிப்பிட்டிருந்ததை அவர் நன்கு அறிந்திருந்தார்.

பெருமானாரிடம் அந்தத் துறவி உரையாடும் பொழுது, அவர்களுடைய முகத்தோற்றத்தையும், அறிவுக்கூர்மையையும், கனிவான சொற்களையும் கண்டு வியப்புற்றார்.

“அபூதாலிப் அவர்களே! இப் பாலகரை கவனமாகப் பார்த்துக் கொள்வீராக! இவர் அரேபியாவின் பேரொளி ஆவார்.

“அரேபியாவிலுள்ள விக்கிரக வழிபாட்டை, அடியோடு அகற்றுபவர் இவர்!

“ஹஸ்ரத் ஈஸா நபி அவர்களின் முன் அறிவிப்புப்படி, ஆண்டவனால் இறுதியாக அனுப்பப்பட்டுள்ள நபி இவர்களே!

“இவர்களுக்கு யூதர்களினால் எந்த இடையூறு களும் உண்டாகாமல் கவனமாகப் பாதுகாத்து வருவீராக” என்று கூறினார் கிறிஸ்துவத் துறவி.

அதிலிருந்து, அபூதாலிப், பெருமானாரை முன்னிலும் பன்மடங்கு கவனமாகப் பாதுகாத்து வரலானார்.

## 8. இயற்கை வனங்களைப் படைத்த ஆண்டவன்

பெருமானார் அவர்கள் ஹஸ்ரத் அபூதாலிபு முன் ஷாம் தேசத்துக்குப் பயணமாகச் சென்ற பொழுது ஆண்டவனுடைய பெருமையையும் வல்லமையையும் காட்டக் கூடிய பல அரிய காட்சிகள் பெருமானாருக்கு நன்கு புலப்பட்டன.

மலைகள், காடுகள், ஆறுகள், ஏரிகள் ஆகியவைப் பெருமானார் அவர்களின் உள்ளத்தில் என்றும் அகலாத ஓர் உண்மையை உணர்த்தின என்றே கூறவேண்டும்.

“ஆண்டவன் ஒருவன் இருக்கின்றான்” என்பதை எண்பிக்கும் வகையில் இவற்றை

யெல்லாம் சுட்டிக்காட்டி, "இத்தகைய பொருள் களை எல்லாம் படைத்தது யார்? அவனுடைய உண்மையை இந்தப் பொருள்கள் உணர்த்த வில்லையா?" என்று சொல்வார்கள், பெருமானார் அவர்கள்.

## 9. நம்பிக்கைக்கு உரியவர்கள்

இளமை முதல் உண்மை, விசுவாசம், நம்பிக்கை முதலான உயரிய குணங்கள் பெருமானார் அவர்களிடம் அமைந்திருந்தன.

உண்மை பேசும் அவர்களுடைய புகழ் எங்கும் பரவியிருந்தது.

நம்பிக்கையிலும் அவ்வாறே உயர்வு பெற்றிருந்தார்கள்.

மக்காவிலுள்ள மக்கள், பெருமதிப்புடைய பொருள்களைப் பாதுகாத்து வைக்கும் பொருட்டுப் பெருமானார் அவர்களிடம் கொண்டு வந்து கொடுப்பார்கள்.

அப்பொறுப்பை பெருமானார் அவர்கள் மிக நாணயமாக நிறைவேற்றினார்கள்.

ஆகையால், "நம்பிக்கைக்கு உரியவர்" "உண்மை பேசுபவர்" என்னும் பொருள்

படைத்த "அல்அமீன்" "அஸ்ஸாதிக்" என்னும் பட்டங்கள் பெருமானார் அவர்களுக்கு வழங்கப் பட்டன.

பெருமானார் அவர்களின் பகைவர்கள் நிந்தித்து எழுதிய கவிதைகளிலும் கூடப் பெருமானார் அவர்களை "அல்அமீன்" என்றே கூறியுள்ளனர்.

## 10. ஏழை பங்காளர்

பெருமானார் அவர்கள் இளமைப் பருவத்திலிருந்தே பணிவும், கனிவும் உடைய வர்களாகத் திகழ்ந்தார்கள்.

நலிவுற்றவர்கள், ஏழைகள் ஆகியோருடைய துன்பங்களைக் கேட்பதற்கு அவர்களின் காதுகள் எப்பொழுதும் தயாராயிருக்கும். உள்ளம் நெகிழ்ந்து உதவி புரிவார்கள்.

தெருவில் நடந்து போகும்பொழுது, அவர்கள் அடக்கத்தோடு நடந்து செல்வார்கள்.

அவர்கள் போகும்போது, 'உண்மையும் நேர்மையும் உடைய' 'அல் அமீன்' 'அதோ போகிறார்கள்' என்று சுட்டிக்காட்டி மக்கள் ஒருவருக்கு ஒருவர் பேசிக்கொள்வார்கள்.

பொருள் வாங்குவதற்காகப் பெருமானார் அவர்கள் கடைக்குப் போகும்பொழுது, வழியில் இருக்கும் ஏழை எளியவர்களின் வீட்டுக் கதவைத் தட்டி, "முஹம்மது கடைக்குப் போகிறார், உங்களுக்குத் தேவையான பொருள் களைச் சொல்லுங்கள், வாங்கி வருகிறேன்" என்று கூறுவார்கள். அவர்கள் சொல்லும் பொருள்களை அவ்வாறே வாங்கி வந்து தருவார்கள்.

## 11. பொறுமை மிக்கவர்கள்

மக்காவிலுள்ள குறைஷி இனத்தவர்களுக்கு வியாபாரமே முக்கிய தொழிலாக இருந்து வந்தது.

பெருமானார் அவர்களின் மூதாதையருக்கும் அதுவே தொழிலாக இருந்தது.

ஒரு வியாபாரிக்கு வேண்டிய முக்கிய அம்சங்களான நம்பிக்கையும் வாக்குறுதியும் பெருமானார் அவர்களிடம் முழுமையாக அமைந்திருந்தன.

அப்துல்லாஹ் இப்னு அபில் அம்ஸா என்னும் வர்த்தகருக்கும் பெருமானார் அவர்களுக்கும் சரக்குகள் கொடுக்கல் வாங்கல் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

ஒருசமயம், தமக்கு வேண்டிய சாமான்களை வாங்கிக் கொள்வதற்காக, பெருமானார் அவர்களிடம், ஒரு குறிப்பிட்ட நேரத்தில் வருவதாக, அப்துல்ஹ்இப்னு அபில் அம்ஸா என்பவர் கூறிச்சென்றார். ஆனால், என்னவோ மறந்துவிட்டார். காலம் கடந்து அங்கே போன சமயம், பெருமானார் அவர்கள் அவ்விடத் திலேயே அவரை எதிர்பார்த்து இருக்கக் கண்டார். எனினும் அவரிடம் பெருமானார் அவர்களுக்குக் கோபமோ வருத்தமோ உண்டாகவில்லை.

"எவ்வளவு நேரமாக இவ்விடத்திலேயே இருக்கிறேன். எனக்கு கஷ்டத்தைக் கொடுத்து விட்டீரே!" என்று மட்டும் கூறினார்கள் பெருமானார் அவர்கள்.

## 12. சச்சரவைத் தீர்த்து வைத்தார்கள்

ஒருசமயம், மக்காவில் நிகழக் கூடியதாயிருந்த ஒரு பெரிய சண்டை பெருமானார் அவர்களின் தீர்க்கமான அறிவுக் கூர்மையாலும், சமாதானத் தூண்டுதலாலும் தவிர்க்கப்பட்டது.

அரேபிய நாடு முழுமைக்கும் புனிதத் தலமாகக் கருதப்படும் கஃபா வின் மதில் பழுதடைந்த நிலையில் இருந்தது: மக்கா வாசிகள்

அனைவரும் அக்கட்டடத்தைப் புதுப்பிக்கக் கருதி, அதன் ஒவ்வொரு பகுதியையும் ஒவ்வொரு குடும்பத்தார் கட்டித்தர முன் வந்தனர்; புனிதத் தலத்தைக் கட்டும் பாக்கியத்தில் எல்லா குடும்பத்தினரும் பங்கு பெறவேண்டும் என்பது அவர்கள் நோக்கம்.

அவ்வாறு பல பிரிவுகளாகக் கட்டட வேலை நிறைவேறியது.

அக்கட்டடத்தின் முக்கிய பகுதியில் 'ஹஜருல் அஸ்வத்' என்னும் கருங்கல்லை நிறுவ வேண்டிய வேலை மட்டும் எஞ்சியிருந்தது. அதை நிறுவும் பாக்கியம் தங்களுக்கே கிடைக்க வேண்டும் என ஒவ்வொரு குடும்பத்தினரும் ஆசைப்பட்டார்கள்.

அதன் காரணமாகப் பெரிய கலவரம் நிகழ இருந்தது. அப்பொழுது முதியவர் ஒருவர், அந்தப் பிரச்சனை தீர ஒருவழி சொன்னார்.

"நாளைக் காலையில் கஃபாவின் வாசல் வழியாக முதன்முதலில் யார் வருகிறாரோ அவர் செய்யும் முடிவை அனைவரும் ஒப்புக்கொள்ள வேண்டும்" என்பதே அவ்வழி!

அதை ஒப்புக்கொண்டு அனைவரும் சென்று விட்டனர்.

மறுநாள் காலை; ஆண்டவனுடைய அருளால், கஃ்பாவின் வாசலில், பெருமானார் அவர்களை மக்கள் அனைவரும் காண நேர்ந்தது. மக்கள் மகிழ்ச்சியோடு ஆரவாரஞ் செய்தனர்.

நம்பிக்கைக்கு உரிய பெருமானார் அவர்கள் செய்யும் முடிவை நாங்கள் அனைவரும் ஏற்றுக்கொள்கிறோம் என எல்லோரும் ஒரே குரலில் சொன்னார்கள்.

உடனே பெருமானார் அவர்கள், அழுத்தமான, அகலமான ஒரு துணியைக்கொண்டு வரச்சொல்லி, அதன் மத்தியில், தங்கள் திருக்கரங்களால் ஹஜருல் அஸ்வதைத் தூக்கி வைத்தார்கள். பிரச்னை உண்டு பண்ணிக் கொண்டிருந்த ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒரு தலைவரைத் தேர்ந்து எடுத்து, அவர்கள் அனைவரையும் அந்தத் துணியைச் சுற்றிலும் பிடித்துக்கொண்டு, கருங்கல்லை நிறுவ வேண்டிய இடத்தில் அதைத் தூக்கி வைக்குமாறு கூறினார்கள். அவர்கள் அவ்வாறு

செய்ததும், பெருமானார் அவர்கள் தங்கள் திருக்கரங்களால் ஹஜருல் அஸ்வத்தை எடுத்து, அதன் பழைய நிலையில் நிறுவினார்கள்.

இந்த நிகழ்ச்சி, அனைவருக்கும் திருப்தி யையும், மகிழ்ச்சியையும் அளித்தது.

## 13. வியாபாரத்தில் நற்பெயர்

மக்காவாசிகள் அந்தக் காலத்தில், தங்களுடைய மூலதனங்களைத் தொழில் தெரிந்தவர் களிடமும், நம்பிக்கையான வர்களிடமும் கொடுத்து, வேற்றுநாட்டுக்குப்போய் வர்த்தகம் செய்யும்படி அனுப்புவார்கள். அதில் கிடைக்கக்கூடிய இலாபத்தை உரியவர்கள் பங்கு பிரித்துக்கொள்வது வழக்கம்.

பெருமானார் அவர்களும் இவ்வாறு பங்கு சேர்ந்து, வியாபாரம் செய்து வந்தார்கள். வியாபாரத்தை அவர்கள் நேர்மையாகவும், சிறப்பாகவும் செய்து வந்தமையால், மக்கா முழுவதும் அவர்களுடைய பெயர் பிரசித்த மாயிற்று.

## 14. பிராட்டியாருக்கும் பெருமானாருக்கும் திருமணம்

பெருமானார் அவர்களின் உயர்வான பண்புகளையும் சிறப்பான குணங்களையும் நேரிலும், பிறர் வாயிலாகவும் அறிந்த கதீஜா நாயகியார், பெருமானார் அவர்களைத் திருமணம் செய்துகொள்ள ஆசைப்பட்டனர்.

கதீஜாப் பிராட்டியாரின் செல்வத்தையும், தாராளத் தன்மையையும் அறிந்த அரபுப் பிரபுக்கள் பலர் பெருமாட்டியாரை மணந்து கொள்ளத் தூது அனுப்பினார்கள். அவர்களை எல்லாம் பெருமாட்டியார் நிராகரித்துவிட்டனர்.

பெருமாட்டியார், தம்மைத் திருமணம் செய்துகொள்ளுமாறு, பெருமானார் அவர்களிடம் நபீஸா என்னும் தோழியைத் தூது அனுப்பிவைத்தனர்.

பெருமானார் தங்கள் பெரிய தந்தை அபூதாலிபிடம் ஆலோசித்து, அவர் சம்மதத்தைப் பெற்று திருமணத்துக்கு இசைந்தனர்.

கதீஜா நாயகியாருக்கும் பெருமானார் அவர்களுக்கும் திருமணம் சிறப்புற நிறைவேறியது.

பெருமானார் அவர்களுக்கு அப்பொழுது வயது இருபத்து ஐந்து! கதீஜா நாயகியாருக்கு வயது நாற்பது.

## 15. இணைந்த அன்பு-இனிய உபசரிப்பு

பெருமானார் அவர்களும் பெருமாட்டியாரும் திருமணத்துக்குப் பிறகு, இணைந்த அன்போடு வாழ்க்கை நடத்தினார்கள்.

எந்தக் காரியமாயினும் பெருமானார் அவர்களின் விருப்பப்படியே பெருமாட்டியார் நிறைவேற்றி வந்தனர்.

தம்முடைய செல்வம் அனைத்தையும் பெருமானார் அவர்களின் ஆதிக்கத்துக்கு அர்ப்பணித்து விட்டனர் பெருமாட்டியார்.

பெருமானார் அவர்களின் குடும்பத்தி னரையும், கூட்டாளி களையும் பெருமாட்டியார் அன்போடு, வரவேற்று, கனிவோடு உபசரித்து அனுப்புவார்கள்.

பெருமானார் அவர்களின் திருமணச் செய்தியைக் கேள்வியுற்று, அவர்களுடைய செவிலித்தாயான ஹலிமா நாச்சியார் மக்காவுக்கு வந்தனர். அவர்களை கதீஜாப் பிராட்டியார் அன்போடு வரவேற்று, இனிதாக உபசரித்து, சில நாட்கள் தங்கள் இல்லத்தில் தங்கி இருக்கச் செய்து, கௌரவித்தனர். அவர்கள் விடைபெற்று ஊருக்குப் புறப்படும்பொழுது நாற்பது ஆடுகளைப் பரிசாகக் கொடுத்து அனுப்பினார்கள்.

## 16. அடிமையை விடுவித்த உயர்பண்பு

செல்வந்தன்-ஏழை; முதலாளி-அடிமை என்ற வேறுபாடின்றி எல்லோரிடமும் அன்பும் சமத்துவமும் கொண்ட இயல்பு உடையவர்களாக பெருமானார் விளங்கினார்கள்.

இந்தச் சமத்துவ இயல்பினால், பெருமானார் உலகத்துக்கே வழிகாட்டியாகத் திகழ்ந்தார்கள்.

போரில் சிறைப்பட்டவர்களை, அடிமைகளாக்கி, அவர்களைப் பண்டமாற்றுப் பொருள்களைப் போல் விற்பனை செய்வது அரபு நாட்டில் அந்தக் காலத்தின் வழக்கமாயிருந்தது.

ஒரு சமயம், சிறைப்பிடித்து அடிமையான ஜைநுப்னு ஹாரிதா என்பவரை விற்பனை செய்வதற்காகச் சந்தைக்குக் கொண்டு சென்றனர். அவரை, ஹக்கீம் இப்னு ஹஸ்ஸாம் என்பவர் விலைக்கு வாங்கி, தம் தந்தையின் சகோதரி கதீஜா நாயகியாருக்கு அன்பளிப்பாக கொடுத்தார்.

கதீஜா நாயகியாரோ, அந்த அடிமையைப் பெருமானாருக்குக் கொடுத்துவிட்டார்கள்.

“பெருமானார் அவர்கள், உடனே ஜைதை அடிமையிலிருந்து விடுவித்து, நீர் இங்கே இருக்க

விரும்பினால் இருக்கலாம்: அல்லது உம் விருப்பம் போல் சுதந்திரமாக எங்கே வேண்டு மானாலும் போகலாம்" என்று கூறினார்கள்.

அவர்களுடைய உயர்பண்பால் உள்ளம் நெகிழ்ந்த ஜைது பெருமானார் அவர்களை விட்டுப் பிரிய மனம் இல்லாதவராய் அவர்களின் காலடியிலே என்றும் இருந்துவிட்டார்.

ஜைது அடிமையான செய்தியை அறிந்த அவருடைய தந்தை, மகனை விடுவித்து அழைத்துப் போவதற்காகத் தேவையான பொருளை எடுத்துக்கொண்டு தேடிவந்தார்.

அவர் மக்கா வந்ததும், தம் மகன் விடுதலை அடைந்த தகவல் தெரியவந்தது. மகனை தம்மோடு வீட்டுக்கு வருமாறு அழைத்தார்.

"அருமைத் தந்தையே! நான் விற்கவும் வாங்கவும் முடியாதபடி, பெருமானார் அவர்களின் அடிமையாகி விட்டேன். மேலும், அவர்களின் மேன்மைக் குணங்கள், பெற்றோரின் அன்பையும் சொந்த வீட்டின் சுகத்தையும் மறக்கச் செய்துவிட்டன!" என்று உள்ளம் கனியக் கூறி, தந்தையை அனுப்பிவிட்டார் ஜைது.

அடிமையாயிருந்த ஜைதை சுதந்திர மனிதனாக்கியதோடு அல்லாமல், தம் சொந்த

மாமி மகள் ஜைனப நாச்சியாரையும் அவருக்குத் திருமணம் செய்து வைத்தார்கள் பெருமானார்.

## 17. முதல் அறிவிப்பு-"ஓதுவீராக!"

ஒரு சமயம் பெருமானார் அவர்கள்; ஹிரா குகையில் ரமலான் மாதம் திங்கட்கிழமை ஆண்டவனுடைய வணக்கத்தில் ஈடுபட்டிருந்தார்கள்.

அப்பொழுது பேரொளி ஒன்று உதயமாயிற்று; ஓருருவம் தோன்றி, "முஹம்மதே! ஓதுவீராக!" என்று கூறியது.

உடனே பெருமானார் அவர்கள் " நான் ஓதுபவன் அல்லனே (எனக்கு ஓதத்தெரியாதே)" என்று கூறினார்கள்.

அப்பொழுது அந்த தேவதூதர் அரபி மொழியில் வேத வசனங்கள் சிலவற்றை ஓதினார்.

அவற்றின் கருத்து:

"எல்லாவற்றையும் படைத்த இறைவனின் திருப்பெயரால் ஓதுவீராக! அவனேதான் மனிதனை இரத்தக் கட்டியிலிருந்து படைத்தான். ஓதுவீராக! உம் இறைவன் மாபெரும் கொடையாளி. அவனே எழுதுகோல் மூலமாகக் கற்றுக்கொடுத்தான்: மனிதனுக்கு அவன்

அறியாதவற்றையெல்லாம் கற்றுக் கொடுக்கிறான்.(96:1-5)

இம்மொழிகளைக் கேட்டதும் பெருமானார் அவர்களுக்கு மெய்சிலிர்த்தது. விவரிக்க இயலாத ஓர் ஆத்ம உணர்ச்சி தோன்றியது.

அவர்கள்முன் தோன்றியவர் "ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம்" என்னும் பெயருடைய வானவர். அவர்கள் அவ்வப்போது பெருமானார் அவர்களுக்கு, ஆண்டவனுடைய சமூகத்திலிருந்து வெளியான தெய்வச் செய்திகளை அறிவிப்பார்கள். இவ்வாறு அறிவிக்கப்படுவது 'வஹீ' (தெய்வீக அறிவிப்பு) என்று கூறப்படும்.

திருக்குர்ஆன் முழுவதும் இவ்வாறு பெருமானார் அவர்களுக்கு ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களால் ஆண்டவன் சமூகத்திலிருந்து கொண்டுவரப்பட்ட தெய்வச் செய்திகளே ஆகும்.

முதல் முறையாக அறிவிக்கப்பட்டது திருக்குர்ஆனின் "அலக்" என்னும் அத்தியாயத்தின் துவக்கத்திலுள்ள ஐந்து திருவசனங்களாகும்.

## 18. துரோகியின் சூழ்ச்சி முறியடிப்பு

மக்காவாசியான உத்மான் இப்னு ஹுவரிஸ் என்பவர் கதீஜா நாச்சியாரின் நெருங்கிய

உறவினர். இவர் பைஸாந்தியம் சென்று அங்கு கிறிஸ்துவரானார். பின்னர் அரபியரின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த ஹிஜாஸ் மாகாணத்தை ரோமாபுரியின் ஆட்சிக்கு உட்படுத்திக் கொடுப்பதாகவும், அப்படியாகி விட்டால் தாமே அங்கு அரசப் பிரதியாகவேண்டும் எனக் கூறி ரோமாபுரிச் சக்கரவர்த்தியிடம் ஏராளமான செல்வத்தைப் பெற்றுக்கொண்டு மக்காவுக்கு வந்து, இரகசியமாகப் பல சூழ்ச்சிகள் செய்தார்.

அவருடைய சூழ்ச்சி வெற்றி பெற்றிருக்கு மானால் அரேபியாவில் பெரிய மாறுதல்கள் நிகழ்ந்திருக்கக்கூடும்.

அவருடைய சூழ்ச்சி பெருமானார் அவர்களுக்குத் தெரிய வந்ததும், அவருடைய முயற்சி நிறைவேறாமல் முறியடித்தார்கள்.

அவரோ தோல்வியுற்றதும் சிரியாவுக்குத் தப்பியோடி, அங்கே கொல்லப்பட்டார்.

பெருமானார் அவர்களின் மாபெரும் சாதனையால், அரபியர்கள் அந்நியர்களுக்கு அடிமையாகாமல் காப்பாற்றப்பட்டனர்.

இந் நிகழ்ச்சி அரேபிய வரலாற்றில் முக்கியம் வாய்ந்ததாகும்.

## 19. பஞ்சத்தின் கொடுமையை அகற்றுதல்

தங்களுடைய குடும்ப காரியங்களோடு பெருமானார் அவர்கள், தேசத்தின் பொதுக் காரியங்களிலும் சிறப்பாக கவனம் செலுத்தி வரலானார்கள்.

அக்காலத்தில் அரேபியாவில் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. ஆயிரக்கணக்கான மக்களும் பிராணிகளும் உயிர் இழந்தனர்.

பெருமானாரின் இயல்பான கருணை உள்ளத்தாலும், தயாள குணத்தாலும், பஞ்ச காலத்தில், ஏழைகளை மிகுந்த பரிவோடு ஆதரித்து வந்தார்கள்.

பெருமானார் அவர்களின் விருப்பப்படி செய்து கொள்வதற்காக கதீஜாப் பிராட்டியார் அளித்திருந்த செல்வம் அனைத்தையும், பஞ்ச நிவாரணத்திலும், ஏழைகளுக்கு உதவுவதிலும் பயன்படுத்தினார்கள்.

அதனால், பஞ்சத்தின் கொடுமையிலிருந்து மக்கள் மீண்டார்கள்.

## 20. பகைவர்களின் தாக்குதல்

ஒருநாள் பெருமானார் அவர்கள், கஃபாவின் அருகில் தனியாக நின்றுகொண்டிருப்பதைக்

கண்ட குறைஷிகள் ஒரு கச்சையைக் கொண்டு அவர்கள் கழுத்தைச் சுற்றி முறுக்க முற்பட்டார்கள்.

அதனால், பெருமானார் அவர்கள் மூச்சுத் திணறி மிகுந்த இன்னலுக்கு ஆளானார்கள்.

அப்பொழுது, தற்செயலாக அங்கே வந்த அபூபக்கர் அவர்கள், அதைக் கண்டதும், அந்தச் சதிக்கூட்டத்தின் மத்தியில் நுழைந்து, மிகுந்த கஷ்டத்தோடு பெருமானார் அவர்களைக் குறைஷிகளின் பிடியிலிருந்து விடுவித்தார்கள்.

ஆனால், குறைஷிகள் அனைவரும் அபூபக்கர் அவர்களைச் சூழ்ந்துகொண்டு தாக்கினார்கள். அதனால் அவர்கள் மயக்கமுற்று கீழே விழுந்து விட்டார்கள் அவர்கள் உணர்வற்று கீழே கிடந்ததைக் கண்டதும் இறந்துவிட்டதாகக் கருதி குறைஷிகள் போய்விட்டனர்.

பிறகு வெகுநேரம் கழித்துத்தான், அபூபக்கர் அவர்கள் உணர்வு பெற்றார்கள்.

## 21. பகைவரின் மனமாற்றம்

சகோதரி வீட்டிலிருந்து உமர் மன அமைதியோடு, பெருமானார் அவர்கள் இருக்கும் இல்லம் நோக்கிச் சென்றார்.

அப்பொழுது பெருமானார் அர்க்கம் என்பவருடைய விசாலமான வீட்டில் இருந்தார்கள்.

துன்புறுத்தப்பட்ட முஸ்லிம்கள் பலர் அங்கே கூடி, தங்களுடைய வணக்கத்தை நிறைவேற்றி வந்தனர்.

அபூஜஹ்லில் விடுத்த அறிவிப்பையும், உமர் வாளுடன் புறப்பட்டதையும் முஸ்லிம்கள் அறிந்து மிகவும் பயத்தோடு இருந்தார்கள்.

ஏனெனில், உமரின் சகோதரி வீட்டில் நிகழ்ந்தது எதுவும் எவருக்குமே தெரியாது!

உமர் வந்து, அடைக்கப்பட்டிருந்த கதவைத் தட்டினார். அப்பொழுதும் அவர் கையில் வாள் இருந்தது.

திகில் அடைந்திருந்த முஸ்லிம்கள் கதவைத் திறக்கத் தயங்கினார்கள்.

அப்பொழுது ஹம்ஸா அவர்கள் முஸ்லிம்களை நோக்கி,"உமரை உள்ளே வரவிடுங்கள். அவர் நல்ல நோக்கத்தோடு வந்தால் சரி, இல்லையானால் அவர் கையிலுள்ள வாளைக் கொண்டே, அவருடைய் தலையைக் கொய்து விடுவேன்" எனத் துணிவோடு கூறினார்கள்.

கதவு திறக்கப்பட்டது. உமர் உள்ளே வந்தார்.

பெருமானார் அவர்கள் எதிரே சென்று“உமரே, நீர் என்ன நோக்கத்தோடு இங்கு வந்தீர்?” என்று கேட்டார்கள்.

அவர்களுடைய வார்த்தையானது, உமரை நடுங்கச் செய்துவிட்டது.

உமர் மிகவும் பணிவோடு,“இஸ்லாத்தை ஒப்புக்கொள்வதற்காக” என்று கூறினார்.

உடனே பெருமானார் அவர்கள், “அல்லாஹு அக்பர்” (ஆண்டவன் மிக உயர்ந்தவன்) என உரக்கக் கூறினார்கள்.

அங்கே இருந்த அனைவரும் உடனே அவர்களோடு சேர்ந்து,“அல்லாஹு அக்பர்” என முழங்கினார்கள்.

மக்காவில் இருந்த மலைகளில் எல்லாம் எதிரொலி கிளம்பின!

உமர் முஸ்லிம் ஆனதும், இஸ்லாமிய வரலாற்றில் ஒரு திருப்பம் உண்டாயிற்று.

அதுவரை முஸ்லிம்களின் எண்ணிக்கை, மிகக்குறைந்த அளவில் இருந்ததால், தங்கள் மத சம்பந்தமான காரியங்களைப் பகிரங்கமாக நடத்த இயலாமல் இருந்தது.

உமர் இஸ்லாத்தைத் தழுவியதும் நிலைமையோ மாறிவிட்டது! உமர் இஸ்லாத்தைத் தழுவிய செய்தியை எல்லோருக்கும் அவர்களே அறிவித்தார்கள்.

அதன்பின்னர், முஸ்லிம்கள் கஃபாவில் எவ்வித பயமும் இல்லாமல் தொழுகையை நிறைவேற்றினார்கள்.

## 22. பிராட்டியாரின் பிரிவு

கதீஜா பிராட்டியார் பெருமானார் அவர்களின் கருத்துக்கேற்ப இணைந்து வாழ்ந்தனர். தொல்லையும் துன்பமும் சூழ்ந்த வேளைகளில் பெருமானார் அவர்களுக்குப் பிராட்டியார் ஆறுதல் அளிக்கக் கூடியவர்களாகவும் இருந்தனர்.

பெருமானார் அவர்களுக்கு கதீஜா பிராட்டியாரிடம் ஒரு ஆணும் நான்கு பெண்களும் பிறந்தனர். ஆண்குழந்தை இளமையிலேயே இறந்துவிட்டது. பெண்கள் நால்வருக்கும் திருமணம் செய்து வைக்கப்பெற்றது.

பெருமானார் அவர்களுக்கு நபிப் பட்டம் கிடைத்த பத்தாவது ஆண்டில், இரண்டு துக்க நிகழ்ச்சிகள் உண்டாயின.

ஒன்று: அபூதாலிப் அவர்களின் மரணம், இரண்டாவது: கதீஜா பிராட்டியாரின் மரணம்.

மிகுந்த உதவியாயிருந்த இருவரின் மரணத்தினால் பெருமானார் அவர்களின் உறுதி கொஞ்சமும் தளரவில்லை.

பெருமானார் அவர்கள், பிரியமானவர்களின் பிரிவினால் உதவியற்றவர்கள் ஆனபோதிலும், ஆண்டவனிடம் அவர்களுக்கு அதிக நம்பிக்கை கூடியது.

ஆண்டவன் எப்பொழுதும் தங்களுக்கு உதவியாக இருப்பான் என்றும், அவன் செய்வது அனைத்தும் நன்மை அளிக்கத்தக்கதா யிருக்கும் என்றும் உறுதியோடு தொடர்ந்து செயல் புரியலானார்கள்.

## 23. எண்ணத்தில் தூய்மை - சொற்களில் உண்மை

நபிப்பட்டம் வரப்பெற்ற பத்தாவது ஆண்டு நடைபெற்ற ஹஜ்ஜுக்கு அரபு நாட்டின் பல பகுதிகளிலிருந்து திரளான மக்கள் மக்காவுக்கு வருகை புரிந்தார்கள்.

பெருமானார் அவர்கள், ஒவ்வொரு கூட்டத்தாரிடமும் சென்று இஸ்லாத்தைப்பற்றி அறிவுறுத்தினார்கள்.

ஒரு பகுதியில் பன்னிரண்டுபேர்+ பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் யத்ரிப் (மதீனா) நகரிலுள்ள கஸ்ரஜ் என்ற கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் அறுவர். அவர்களிடம் சென்று இஸ்லாத்தைப்பற்றி போதித்தார்கள். அவர்களும் மிகவும் கவனமாகக் கேட்டார்கள். பெருமானார் அவர்களின் பரிசுத்தமான எண்ணமும், சொற்களின் உண்மையும் அவர்கள் உள்ளத்தில் பசுமையாகப் பதிந்து அவர்களிடையே மனமாறுதலை உண்டாக்கியது. அவர்கள் அறுவரும் அங்கேயே இஸ்லாத்தைத் தழுவினார்கள்.

அவர்கள் மக்காவிலிருந்து யத்ரிபுக்குத் திரும்பியதும், "மக்காவில் ஒரு பெரிய நபி தோன்றியுள்ளார். பல நூறு ஆண்டுகளாக நிலவி வந்த பகைமையை, வெகுவிரைவில் அகற்றிவிடக்கூடியவர்; அவரிடம் உண்மை ஒளி திகழ்கிறது. அவர் இறைவனுடைய மார்க்கத்தை உலகில் பரப்புவார்" என்பதாகப் பிரபலப்படுத்தினார்கள்.

* * *

அடுத்த ஆண்டு, ஹஜ் சிறப்பு நாளில், முன்பு வந்தவர்களில் சிலரும் ஔஸ் கோத்திரத்திலிருந்த சிலரும் ஆக மொத்தம் பன்னிருவர் வந்தனர். அவர்களில் புதிதாக வந்தவர்களும் உடனேயே இஸ்லாத்தில் சேர்ந்தனர்.

அவர்கள் அனைவரும் பெருமானார் அவர்களிடம் சில வாக்குறுதிகள் அளித்தனர். அவை பின்வருமாறு:

1. நாங்கள், இறைவனுடன் வேறு யாரையும் இணை வைப்பதில்லை.
2. விபசாரம், களவு செய்வதில்லை.
3. மக்களைக் கொல்வதில்லை.
4. நபி அவர்களை முழுமையாகப் பின்பற்றுவோம்.
5. சுக துக்கங்களில் அவர்களுடன் உண்மையாக இருப்போம்.

இவ்வுறுதி மொழி நிறைவேறியதும், இஸ்லாத்தின் கொள்கைகளை தங்கள் நாட்டில் பரப்புவதற்காகப் பெருமானார் அவர்களின் சீடர்களில் ஒருவரை தங்களோடு அனுப்பி வைக்குமாறும் வேண்டிக் கொண்டனர்.

அவ்வாறே முஸ்அப் இப்னு உைஹமர் என்பவரை அவர்களுடன் பெருமானார் அவர்கள் அனுப்பிவைத்தார்கள்.

முஸ்அப் யத்ரிபுக்குச் சென்று அஸ்அது என்பவரின் இல்லத்தில் தங்கி, தினந்தோறும் ஒவ்வொருவர் வீட்டிற்கும் சென்று, 'திருக்குர்ஆனை' ஓதிக்காட்டி, இஸ்லாத்துக்கு அழைப்பார்கள். தினமும் ஓரிருவர் என பலர் இஸ்லாத்தில் சேர்ந்தனர். சில நாட்களிலேயே யத்ரிபிலிருந்து குபா வரையிலும் இஸ்லாம் பரவிவிட்டது.

## 24. மக்காவை விட்டுப் பிரிதல்

பகைவர்கள் உருவிய வாள்களோடு பெருமானார் அவர்களை எதிர்பார்த்துச் சூழ்ந்திருக்கின்றனர்.

அத்தகைய வேளையிலுங் கூட, பெருமானார் அவர்கள் உயிரைக் காட்டிலும் நம்பிக்கையைக் காப்பாற்றுவதையே பெரிதாகக் கருதினார்கள்.

அலி அவர்களை அழைத்து வரச்செய்து, "மக்காவை விட்டுப் புறப்பட்டுச் செல்லும்படி எனக்கு உத்தரவு கிடைத்திருக்கிறது. என்னுடைய கட்டிலில் என்னுடைய போர்வையைப்

போர்த்துக்கொண்டு நீர் படுத்துக்கொள்ளும். காலையில் எழுந்து என்னிடம் நம்பிக்கையாகக் கொடுக்கப்பட்டிருந்த பொருள்களை, அவற்றிற்கு உரியவர்களிடம் ஒப்படைத்துவிட்டு, நீர் மதீனாவுக்கு வந்து சேரும்" என்று கூறினார்கள்.

அதன்பின் பெருமானார் அவர்கள் வெளியே வந்து, கஃபாவைப் பார்த்து, "மக்காவே! உலகிலுள்ள அனைத்திலும் நீ எனக்கு மேன்மையாக இருக்கிறாய். ஆனால் உன்னுடைய மக்களோ, என்னை இங்கே இருக்கவிடவில்லை" என்று கூறிவிட்டு, அபூபக்கர் அவர்கள் வீட்டுக்குச் சென்று, அங்கிருந்து இருவரும் புறப்பட்டுச் சென்று மூன்று மைல் தொலைவிலுள்ள தௌர் என்னும் குகையில் தங்கினார்கள்.

## 25. முதல் பள்ளிவாசல்

மதீனாவுக்கு மூன்று மைல் தொலைவிலுள்ள குபா என்னும் ஊரில் பெருமானார் அவர்களும் அபூபக்கர் அவர்களும் வந்து சேர்ந்தனர்.

அங்கே இருந்த அன்சாரிகள் (மதீனாவாசிகள்) பெருமானார் அவர்கள் வருகை தெரிந்ததும், மிகுந்த அன்போடு வரவேற்று அழைத்து வந்து உபசரித்தனர்.

மக்காவிலிருந்து அலி அவர்களும் குபாவில் பெருமானார் அவர்களுடன் வந்து சேர்ந்து கொண்டார்கள்.

பெருமானார் அவர்கள் குபாவில் முதலாவதாக ஒரு பள்ளிவாசல் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மற்றவர்கள் கட்டட வேலை செய்வதைப் போல நபி பெருமானாரும் பொருள்களை எடுத்துக்கொடுத்துகூட வேலை செய்வார்கள்.

"நீங்கள் ஒன்றும் செய்ய வேண்டாம்: நாங்கள் எடுத்துக் கொள்கிறோம்" என மக்கள் சொல்வார்கள். அப்பொழுது பெருமானார் அவர்கள் சிறிது நேரம் சும்மா இருப்பார்கள். பிறகு மீண்டும் வேலையில் ஈடுபட்டு விடுவார்கள்.

கட்டட வேலை செய்தவர்களுள் அரபிக் கவிஞர் ஒருவரும் இருந்தார். வேலை செய்யும் சிரமம் தெரியாமல் இருக்கும் பொருட்டு, அந்தக் கவிஞர் பாடுவார். பெருமானார் அவர்களும் அவரோடு சேர்ந்து பாடுவார்கள்.

குபாவில் பெருமானார் அவர்கள் திங்கள் கிழமையிலிருந்து வியாழன் வரை தங்கியிருந்து வெள்ளிக்கிழமை அதிகாலையில் புறப்பட்டு

பனூ ஸலீமுப்னு அவ்பு இடத்துக்கு வந்தார்கள். ஜும்ஆத் தொழுகை நேரம் வந்துவிட்டதால், வாதீ ரானூனா என்னுமிடத்தில் ஜும்ஆத் தொழுகையை நிறைவேற்றினார்கள். மதீனாவில் அவர்கள் நடத்திய முதல் ஜும்ஆத் தொழுகை இதுதான்.

## 26. மதீனாவில் பள்ளிவாசல்

பெருமானார் அவர்கள் மதீனாவுக்கு வந்து தங்கியதும், அங்கே ஒரு பள்ளிவாசலை நிறுவத் தீர்மானித்தார்கள்.

தங்களுடைய ஒட்டகம் முதன்முதலாக எந்த இடத்தில் நின்றதோ அந்த இடத்திலேயே பள்ளி வாசலைக் கட்டவேண்டும் என்பது பெருமானார் அவர்கள் விருப்பம்.

அந்த இடமானது ஸஹ்லு, ஸுஹைலு என்ற அநாதைச் சகோதரர் இருவருக்கு உரியது.

பெருமானார் அவர்களின் எண்ணத்தை அறிந்த அந்தச் சகோதரர்கள் விலை ஏதும் பெறாமலேயே இடத்தைத் தர முன்வந்தனர்.

கருணையே உருவான பெருமானார் அவர்கள், அபூபக்கர் அவர்களைக் கொண்டு

அந்தச் சகோதரர்களுக்கு, இடத்துக்கான கிரயத்தைக் கொடுக்கச் செய்தார்கள்.

பள்ளிவாசல் கட்டட வேலை தொடங்கப் பட்டது. மற்றவர்களுடன் சேர்ந்து பெருமானார் அவர்களும் கட்டட வேலை செய்தார்கள்.

பள்ளிவாசல் எளிய முறையில் அமைந்தது. எனினும் வணக்கம், தூய்மை, ஒழுக்கம், சத்தியம், சுத்தம் என்னும் உபகரணங்கள் அதில் இருந்தன.

பள்ளிவாசலைச் சார்ந்த இரண்டு அறைகள் பேரீச்ச ஓலைகளால் அமைக்கப்பட்டு, அவற்றிலே பெருமானார் அவர்களும் குடும்பத்தினரும் இருந்து வந்தனர்.

ஐந்து வேலைத் தொழுகைகளையும் பெருமானார் அவர்கள், அந்தப் பள்ளி வாசலிலேயே நடத்தி வந்தார்கள்.

அங்கேயே மக்களுக்கு அறிவுரைகளும் கூறி வந்தார்கள்.

## 27. பெருமானார் அவர்களின் எளிய வாழ்க்கை

மதீனாவில் பள்ளி வாசலை ஒட்டி அமைந்திருந்த இரண்டு அறைகளில், பெருமானார்

அவர்கள் குடும்பத்தோடு வாழ்ந்து வந்தார்கள். அறைகளோ மிகவும் சிறியன. இரவு நேரங்களில் அந்த அறையில் விளக்குக்கூட இருக்காது.

பெருமானார் அவர்களின் இல்லற வாழ்க்கை மிகவும் எளிமையாகவே இருந்தது. நாள் கணக்கில் அடுப்பு எரியாமலேயே இருக்கும். பெருமானார் அவர்கள் பேரீச்சம்பழத்தைச் சாப்பிட்டு தண்ணீரைப்பருகி, திருப்தி அடைவார்கள். ரொட்டி சுடுவதற்கு மாவு கிடைக்கவில்லையானால், வெறும் மாமிசத்தை மட்டுமே சமைத்து உண்டு விடுவார்கள். சில வேளைகளில், பெருமானார் அவர்கள் ஒட்டகப் பாலையும் அருந்துவார்கள்.

பெருமானார் அவர்கள் தாங்களே வீட்டைப் பெருக்குவார்கள்; நெருப்புப் பற்ற வைப்பார்கள்: தங்கள் உடைகளைத் தைத்துக்கொள்வார்கள்.

எவ்வளவோ வசதிகளைச் செய்து கொள்ளக் கூடிய வாய்ப்பும் வசதியும் இருந்தும் அவர்கள் அவற்றை யெல்லாம் விரும்பாமல், சாதாரண மாகவே இருப்பார்கள்.

அவர்களுடைய எளிய வாழ்க்கை மக்களைப் பெரிதும் கவர்ந்தது. மதீனாவில் உள்ள ஒவ்வொரு பிரிவினரும் பெருமானார் அவர்களிடம் சிறப்பு மிக்க மதிப்பு வைத்திருந்தார்கள்.

## 28. புதல்வியர் திருமணம்

இந்த வருடத்தில் பெருமானார் அவர்களின் குமாரத்தி பாத்திமா நாச்சியார் அவர்கள், அலீரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குத் திருமணம் செய்து கொடுக்கப்பட்டார்கள்.

பெருமானார் அவர்கள் தங்கள் மகளுக்கு ஸ்திரீதனமாக தோல் படுக்கை, தோல் கூசா, இரண்டு திரிகைகள் இரண்டு மண்பானைகள் ஆகியவற்றையே அளித்தார்கள்.

இதே வருடத்தில்தான் ரமலாவினுடைய நோன்பு கடமையாக்கப்பட்டது. நோன்பு முடிந்த மறுநாள் 'ஈதுல்ஃபித்ரு என்னும் பெருநாளாகக் கொண்டாடப் பெற்றது, தவிரவும் ஃபித்ரா, (ஸதக்கா) தர்மங்கள் செய்யும் முக்கிய காலமாகவும் கடைப்பிடிக்கப்பெற்றது அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்தியதும் இந்த வருடத்திலேதான் என்பது குறிப்பிடத்தக்கது (குத்பாச் சொற்பொழிவு).

## 29. பெருமானார் கண்ட கனவு

பெருமானார் அவர்கள் காலையில் தோழர்களை அழைத்து ஆலோசனை செய்தார்கள்.

சண்டைபற்றி தாங்கள் கண்ட கனவுகளை விரிவாக எடுத்துக் கூறினார்கள்.

'தங்களுடைய வாளின் நுனி சிறிது முறிந்து விட்டதாகக்' கண்டார்கள். அதன் பயனாய்த் தங்களுக்குச் சிறிது நஷ்டம் உண்டாகும் என்று விளக்கம் கூறினார்கள்.

'தங்களுடைய திருக்கரங்களை ஒரு கவசத்தில் போட்டிருப்பதாகக் கண்டார்கள் கவசமானது மதீனா என்றும், மதீனா பத்திரமான இடமாக இருப்பதால், அதற்குள் இருந்து கொண்டே சண்டை செய்யவேண்டும் என்பது கருத்து' என்றும் கூறினார்கள்.

'சில பசுக்கள் அறுக்கப்பட்டுக் கொண்டிருப் பதாகக்' கண்டார்கள் - அதற்கு தங்களைச் சேர்ந்தவர்களில் சிலர் கொல்லப்படுவார்கள் என்று பொருள் உரைத்தார்கள்.

பெருமானார் அவர்களின் கருத்து மதீனா வுக்குள் இருந்தே தற்காப்புச் சண்டை செய்ய வேண்டும் என்பதே யாகும்.

பெண்களை அருகிலுள்ள கோட்டைகளுக்கு அனுப்பிவிட்டு, ஆண்கள் எல்லோரும் நகரில் இருந்துகொண்டே சண்டை செய்யவேண்டும்

என்று தோழர்களில் முக்கியமானவர்கள் பலரும் கூறினார்கள்.

பத்ரு போருக்குப் பிறகு வெளியே முஸ்லிமான வரும், அந்தரங்கத்தில் முஸ்லிம்களுக்குப் பகைவராகவும் இருந்த அப்துல்லாஹ் இப்னு உபையும், எந்த அபிப்பிராயத்தையும் வெளிப் படையாகச் சொல்லாதவர். ஆனாலும் அவரும் எதிரிகளின் பலம் அதிகமாயிருப்பதால், திறந்த வெளியில் பகைவர்களை எதிர்த்துப்போரிடக் கூடாது என்று கூறினார்.

பத்ருச் சண்டையில் கலந்துகொள்ளாத வாலிபர்கள் சிலர் நகரைவிட்டு வெளியே போய் எதிரிகளைத் தாக்கவேண்டும் என ஒரு மனதாகச் சொன்னார்கள்.

## 30. கேடயமாக நின்று காத்தனர்

குறைஷிகள் வீரர்களுள் பெயர் பெற்ற அப்துல்லா இப்னு கமீயா என்பவர் முஸ்லிம் அணிகளை, வாளினால் வெட்டிக்கொண்டே முன்னேறி, நபி பெருமானாரின் சமீபமாக வந்து, கையிலிருந்த வாளை பெருமானாருக்கு எதிராக வீசினார். அந்த வாள் பெருமானார் அவர்களின் கவசத்தில் பட்டுக் கவசம் உடைந்தது. அதன்

இரண்டு துண்டுகள் முகத்திற்குள் புகுந்தன. பெருமானார் அவர்கள் தலையிலும் காயம்பட்டு, ஒரு பல்லும் உடைந்தது. அதே சமயம் நாலா பக்கங்களிலிருந்தும் பெருமானாரைக் குறிவைத்து வாள்கள் வீசப்பட்டன. அம்புகள் எய்யப்பட்டன.

அதைக்கண்ட முஸ்லிம் வீரர்கள் பெருமானார் அவர்களைச் சுற்றி வளைத்து நின்று கொண்டார்கள்.

அபூதுஜானா நாயகத்தை மறைத்து நின்று கொண்டு, தம் உடலையே அவர்களுக்குக் கேடயமாக்கிக் கொண்டார். எதிரிகளின் அம்புகள் அவருடைய முதுகிலேயே பட்டுக் கொண்டிருந்தன.

தல்ஹா அவர்கள் எதிரிகளின் வாள் வீச்சுக்களைத் தம் கையினாலேயே தடுத்துக் கொண்டிருந்தனர். அதனால், அவருடைய ஒரு கை வெட்டப்பட்டுக் கீழே விழுந்தது. இறுதியாக, குறைஷிகளின் பக்கமிருந்து இரண்டு வாள்கள் ஒரே சமயத்தில் அவர்கள் மீது வீசப்படவே, அவர்கள் மூர்ச்சித்துக் கீழே விழுந்தார்கள்.

உடனே அபூபக்கர் அவர்கள் சென்று முகத்தில் தண்ணீர் தெளித்தார்கள்.

சிறிது நேரத்தில் மூர்ச்சை தெளிந்த தல்ஹா அவர்கள் அபூபக்கர் அவர்களிடம், " நாயகத்தின் நிலைமை எப்படி இருக்கிறது?" என்று கேட்டார்கள்.

"பெருமானார் அவர்கள் நலமாக இருக்கிறார்கள். அவர்களே என்னைத் தங்களிடம் அனுப்பி வைத்தார்கள்" என்று கூறினார்கள் அபூபக்கர் அவர்கள்.

அவ்வார்த்தைகளைக் கேட்டதும் தல்ஹா, "புகழ் எல்லாம் அல்லாஹ்வுக்கே. இந்த நற்செய்திக்குப் பின் எத்தகைய துன்பம் நேரிட்ட போதிலும், எனக்கு அது எளிதாகவே இருக்கும்" என்று முகமலர்ச்சியோடு கூறினார்கள்.

பெருமானாரை நோக்கி, குறைஷிகள் அம்புகளை எய்து கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது பெருமானாரின் திருவாயிலிருந்து, "ஆண்டவனே! என்னுடைய சமூகத்தார்களை மன்னிப்பாயாக! அவர்கள் அறியாமையில் ஆழ்ந்து கிடக்கிறார்கள்" என்ற சொற்கள்தாம் வந்துகொண்டிருந்தன.

அனஸ் அவர்களின் நெருங்கிய உறவினரான அபூதல்ஹா என்பவர் தம்முடைய கேடயத்தைக்

கொண்டு பெருமானார் முகத்தின் முன் பிடித்து, எதிரிகளின் அம்பு தாக்காதவாறு மறைத்துக் கொண்டனர். பெருமானார் அவர்கள் எதிரிகளின் பக்கமாக தங்கள் தலையை உயர்த்திப் பார்த்தார்கள். அப்பொழுது அபூதல்ஹா, பெருமானார் அவர்களிடம் "தங்கள் தலையை உயர்த்தாமல் இருக்கவேண்டும். உயர்த்தினால் அம்புகள் பாயலாம். என்னுடைய மார்பை உங்களுக்கு முன்னே வைத்திருக்கிறேன்" என்று கூறினார்.

## 31. திருமுகத்தில் இரத்தம் பீறிடுதல்

போரில் பெருமானார் அவர்கள் உயிர் துறந்து விட்டதாக, மதீனாவுக்குச் செய்தி எட்டி, அங்கிருந்தோர் பெருமானாரைக் காண்பதற்காக ஓடோடி வந்தனர்.

அவ்வாறு வந்தவர்களில் ஹன்லல்லா இப்னு அபூ ஆபீர் என்பவரும் ஒருவர். அவருக்கு அன்றுதான் திருமணமாகி இருந்தது. செய்தி கிடைத்ததும் மிகுந்த ஆத்திரத்தோடு, போர்க்களத்துக்கு ஓடி வந்தார். வந்ததும் குறைஷிகளின் அணிகளில் புகுந்து அவர்களை வெட்டி வீழ்த்தியவாறு முன்னேறி, அபூஸ ஃப்யானையும் நெருங்கி விட்டார்.

ஆனால், எதிரிகள் பல பக்கங்களிலும் சூழ்ந்து கொண்டு அவர் உயிர் துறக்கும்படியான பலத்த காயங்களை உண்டாக்காமல் இருந்தால், அபூஸுஃப்யானையும் அவர் கொன்றிருப்பார்.

பெருமானார் அவர்களின் மகளார் பாத்திமா நாச்சியார் வந்து பெருமானார் அவர்களைக் காணும்போது, அவர்களுடைய முகத்திலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. முகத்தில் அழுந்தி இருந்த கவசத்துண்டுகளை அபூஉபைதா என்பவர் தம்முடைய பற்களால் கடித்து இழுக்கவே, அத்துண்டுகள் வெளியே வந்தன. அதனால் அபூ உபைதாவின் இரண்டு பற்கள் உடைந்து விழுந்தன.

அலீ அவர்கள் கேடயத்தில் தண்ணீர் கொண்டு வந்தார்கள்.

பாத்திமா நாச்சியார் அந்தத் தண்ணீரால் கழுவியும் கூடப் பெருமானார் அவர்களின் முகத்திலிருந்து இரத்தம் பீறிட்டு வருவது நிற்கவில்லை.

## 32. போர்முனைக்கு ஓடி வந்தனர்

முஸ்லிம்களில் ஆண்களும் பெண்களும், பெருமானார் அவர்களிடத்தில், எத்தகைய

அன்பும் விசுவாசமும் கொண்டிருந்தார்கள் என்பதை வரலாற்று நிகழ்ச்சிகள் நிரூபிக்கின்றன.

பகைவர்களின் தாக்குதல் பலமாயிருக்கும் போது, முஸ்லிம் வீரர்களில் சிலர் போர்முனையை விட்டு மதீனாவுக்கு ஓடிவிட்டனர்.

அவர்கள் தங்கள் வீடுகளுக்குச் சென்றதும் அவர்களுடைய மனைவியர்களுக்கு நிகழ்ந்தவை தெரிந்ததும், "நாயகத்தைப் போர்க்களத்தில் விட்டுவிட்டு, நீங்கள் எதற்காக இங்கு வந்தீர்கள்?" என்று இடித்துக் கூறினர்.

சண்டையின் நிலைமை மதீனாவுக்குத் தெரிந்ததும் எத்தனையோ பெண்கள் பெருமானார் அவர்களைக் காண்பதற்காகப் போர்முனைக்கு விரைந்தனர்.

அவர்கள் அனைவரும் போர்க்களத்தில் மாண்டுபோன நெருங்கிய உறவினர்களுக் காகவோ அல்லது காயம் அடைந்தவர்களுக் காகவோ அவ்வளவு கவலையுறவில்லை. பெருமானார் அவர்களின் நலத்தைப் பற்றியே ஒவ்வொருவரிடமும் வழியெல்லாம் விசாரித்துக் கொண்டிருந்தார்கள்.

## 33. கவலையும் துக்கமும் பறந்து ஓடின

மதீனாவிலிருந்து பனூ தீனார் கோத்திரத்தைச் சார்ந்த பெண்மணி ஒருவர் பெருமானாரைக் காண்பதற்காக போர்முனைக்கு வந்தார். வரும் வழியில், போர்முனையிலிருந்து திரும்பிக் கொண்டிருந்த சிலர் அந்தப் பெண்மணியைப் பார்த்து, "உம்முடைய தந்தை போரில் உயிர் துறந்து விட்டார்" என்று கூறினார்கள்.

அதற்கும் அந்தப் பெண்மணி, " நாம் எல்லோரும் ஆண்டவனிடம் இருந்தே வருகிறோம்; நிச்சயம் அவனிடமே மீண்டும் செல்வோம்" என்று கூறிவிட்டு, " பெருமானார் அவர்கள் எவ்வாறு உள்ளார்கள்?" என்று கேட்டார்.

அவர்கள், "உம்முடைய சகோதரரும் மரணம் அடைந்துவிட்டார்!" என்றனர் திரும்பி வந்து கொண்டிருந்தவர்கள்.

அதற்கும் முன் சொன்னவாறே கூறிவிட்டு மீண்டும்,"பெருமானார் அவர்கள் எந்த நிலையில் இருக்கிறார்கள்?" என்று வினவினார் அந்தப் பெண்மணி.

மறுபடியும் அவர்கள், "உம்முடைய கணவரும் கொல்லப்பட்டார்" என்றனர்.

அப்பொழுதும் அப்பெண்மணி பெருமூச் செறிந்து "இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்" என மீண்டும் கூறிவிட்டு, "பெருமானார் அவர்கள் எவ்வாறு இருக்கின்றனர்?" என்றே கேட்டார்.

"பெருமானார் அவர்கள் நலமாக இருக்கின் றார்கள்" என்ற சொற்களைக் கேட்டவுடன் அவருடைய கவலை பறந்தோடிவிட்டது.

போர்முனைக்கு வந்து பெருமானார் அவர்களின் திருமுகத்தைப் பார்த்ததும் தம்மை மறந்து, "தாங்கள் இருக்கும்போது எவ்வளவு துன்பங்கள் வந்தபோதிலும் அவை எங்களுக்கு ஒரு பொருட்டல்ல; நானும் என் தந்தையும், என் சகோதரரும், என் கணவரும் தங்களுக்கு அர்ப்பணமாகி விட்டோம். ஆண்டவனுடைய திருத்தூதரே! தங்களைப் பெற்றிருக்கும்போது கேவலம் நாங்கள் என்ன?" என்று கூறினார்.

## 34. உயிர் இழந்த உத்தமர்கள்

மற்றஇரு கூட்டத்தினர் முன்போலவே, பெருமானார் அவர்களிடம் வந்து தங்கள் கூட்டத்தார் இஸ்லாத்தைத் தழுவி இருப்பதாகவும், அவர்களுக்கு மார்க்க

சம்பந்தமான விஷயங்களைப் போதிப்பதற்காகச் சிலரை அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள்.

அவர்களின் வேண்டுகோளின்படி, ஆஸிம்-இப்னு-தாபித் உட்பட ஆறு பேரை பெருமானார் அவர்கள் அனுப்பி வைத்தார்கள்.

அவர்கள் அர்ரஜீஃ என்னும் இடம் போய்ச் சேர்ந்ததும், அவர்களை அழைத்துக்கொண்டு சென்றவர்கள் பக்கத்திலுள்ள வேறு ஒரு கூட்டத்தாரைத் தூண்டிவிட்டு, முஸ்லிம்களைத் தாக்கிக் கொல்லும்படி செய்தார்கள். அவர்கள் இருநூறு பேர் ஆயுதங்களுடன் தாக்குவதற்கு வந்தனர். முஸ்லிம்கள் அறுவரும் அருகிலிருந்த ஒரு குன்றின்மீது ஏறிக் கொண்டார்கள்.

“நீங்கள் கீழே இறங்கி வந்தால், உங்களை நாங்கள் பாதுகாப்போம்” என்றார்கள் அந்தக் கூட்டத்தாரில் அம்பு எய்வோர்.

முஸ்லிம்களின் தலைவர் ஆஸிம் அதற்கு, “விசுவாசமற்றவர்கள் ஆதரவில் வரமாட்டோம்” என்று பதில் அளித்துக் கீழே இறங்கி சண்டை செய்து வீர மரணம் அடைந்தனர்.

குன்றின்மீது மீதி இருவர் மட்டும் இருந்தனர். அவர்கள் பகைவர் பேச்சை நம்பி கீழே இறங்கி வந்தனர். அவர்களைச் சிறைப்படுத்தி மக்காவுக்குக் கொண்டுபோய் அடிமைகளாக விற்றுவிட்டனர். அந்த இருவரில் ஒருவர் குபைப், மற்றொருவர் ஸைத்.

மேற்படி இருவரும் பத்ருப் போரின்போது மக்காவாசியான ஹாரித்-இப்னு-ஆமீரைக் கொன்றதற்குப் பழி வாங்கும் நோக்கத்தோடு ஹாரிதின் மக்கள் அவர்களை விலைக்கு வாங்கி, கொஞ்ச நாள் வைத்திருந்து பிறகு கஃபாவின் எல்லையைக் கடந்து வெளியே கொண்டு போய் வதைத்துக் கொன்று விட்டனர்.

அந்த இருவரில் ஒருவரான குபைப் வெட்டப்படுவதற்கு முன்னர், இரண்டு முறை தொழுகைக்கு அனுமதி கேட்டார். தொழுகை நிறைவேறியதும் எதிரிகளை நோக்கி, “வெகுநேரம் வரை, தொழ எனக்கு விருப்பம் உண்டு. ஆனால் நான் மரணத்துக்குப் பயந்து அவ்வாறு செய்தேன் என்று நீங்கள் நினைத்து விடக்கூடும். ஆதலால் வெகுநேரம் தொழவில்லை” என்று கூறிவிட்டு, அரபியில் ஒரு கவிதை பாடினார். அதன் கருத்து:

"இஸ்லாத்துக்காக நான் வெட்டப்படும் போது, எவ்வாறு வெட்டப்படுவேன் என்ற கவலை எனக்கு இல்லை, நான் வெட்டப்படுவது ஆண்டவனுக்காகவே. அவன் விரும்பினால் என்னுடைய உடலின் ஒவ்வொரு சிறிய பகுதிக்கும் நல்லருளை இறக்கலாம்"

மற்றொருவரான ஸைதை விலைக்கு வாங்கியிருந்த ஸப்வான் என்பவர் அவரைச் சிரச்சேதம் செய்வதற்கு ஒரு நாள் குறிப்பிட்டு, இந்த நாளில் குறைஷிகள் எல்லோரையும் வருமாறு சொல்லியிருந்தார். அதைக் காண்பதற்காக எல்லோரும் வந்து கூடினார்கள். அவர்களில் அபூஸுஃப்யானும் ஒருவர்.

அப்பொழுது ஸைதைப் பார்த்து, "இந்த நேரத்தில் உமக்குப் பதிலாக, முஹம்மதை வெட்டுவதாயிருந்தால், அதை உம்முடைய நல்வாய்ப்பாக நீர் கருத மாட்டீரா? உண்மையை கூறும்" என்று கேட்டார் அபூஸுஃப்யான்.

அதற்கு, "நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களின் பாதங்களில் முள் தைப்பதனால், என் உயிர் பாதுகாக்கப்படும் என்ற போதிலும் அவர்கள் பாதங்களில் முள் தைப்பதைவிட, என்

உயிரைப் பலி கொடுக்கவே நான் மனப்பூர்வமாகத் தயாராயிருப்பேன் என்பதை ஆண்டவன் சத்தியமாக நான் கூறுகிறேன்" என்றார் ஸைத்.

அதைக்கேட்ட அபூஸுஃப்யான், "முஹம்மதை அவரைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு உண்மையான அன்போடு நேசித்து வருகிறார்களோ அவ்வளவு அன்போடு வேறு எவரையும் அவருடைய தோழர்கள் நேசித்து வந்திருப்பதை நான் பார்த்ததில்லை" என்று கூறி வியப்படைந்தார்.

அதன்பின் ஸைதை வெட்டிக் கொன்றுவிட்டனர்.

## 35. கொலை செய்யச் சதி

யூதர்களுள் ஒரு பிரிவினரான பனூநலீர் கூட்டத்தார் முஸ்லிம்களுக்கு விரோதமாகக் கிளம்பினார்கள்.

அவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் நட்புறவு உடன்படிக்கை முன்னர் ஏற்பட்டிருந்தது. அந்த உடன்படிக்கையின்படி, நஷ்டஈடு சம்பந்தமாக அவர்களும் முஸ்லிம்களுக்கு உதவிபுரிய வேண்டியிருந்தது. அதைக் கேட்பதற்காக பெருமானார் அவர்கள் பனூநலீர் கூட்டத்தாரிடம் சென்றார்கள். ஆரம்பத்தில் அந்த கூட்டத்தார்

உதவி செய்வதாகப் பாவனை செய்தார்கள். ஆனால் பெருமானாரின் உயிருக்கு ஆபத்து விளைவிக்க மறைமுகமாகச் சதி செய்திருந்தார்கள்.

பெருமானார் அவர்கள் ஒரு சுவரின் பக்கமாக் உட்கார்ந்திருந்தார்கள். அந்த சுவரின் மேல் ஒரு பெரிய கல் வைக்கப்பட்டிருந்தது. அதைப் பெருமானார் அவர்களின் மீது தள்ளி விடுவதற்காக ஒரு யூதர் மாடிக்குச் சென்றார். அந்தக் கல்லைத் தள்ள முயன்றும் அவருடைய நோக்கம் நிறைவேறவில்லை. பெருமானார் அவர்களுக்கு உதிப்பாக இச்செய்தி தெரிந்ததும் அங்கு இருந்து திரும்பிவிட்டார்கள்.

## 36. யூதர்களின் சூழ்ச்சி

பெருமானார் அவர்களை விரோதிக்குமாறு மக்காவிலுள்ள குறைஷிகள் மதீனாவிலுள்ள யூதர்களுக்குக் கடிதம் எழுதியிருந்தார்கள்.

பனூநலீர் கூட்டத்தினர் ஏற்கனவே முஸ்லிம் களுக்குப் பகைவர்களாயிருந்து வந்தார்கள். குறைஷிகளின் கடிதம் கிடைத்ததிலிருந்து மேலும் பகிரங்கமாக விரோதத்தைக் காட்டத் தொடங்கினார்கள்.

பெருமானார் அவர்களுக்கு யூதர்கள் ஒரு தூது அனுப்பினார்கள்.

அதாவது, "முஸ்லிம்களில் முப்பது பேரை, யூதர்கள் குறிப்பிடக்கூடிய இடத்துக்குக் கூட்டிக்கொண்டு வருமாறும், தாங்களும் தங்களுடைய மதகுருமார்களைக் கூட்டிக் கொண்டு அங்கு வருவதாகவும், அவர்களுக்குப் பெருமானார் அவர்கள் சமய போதனை செய்ய வேண்டும் என்றும், அந்தப் போதனையினால், மதகுருமார்கள் மனம் மாறி, முஸ்லிம்கள் ஆவதானால் தங்கள் கூட்டத்தார் அனைவருமே அதைப் பின்பற்றுவதில் ஆட்சேபணை இல்லை" என்றும் சொல்லி அனுப்பினார்கள்.

ஆனால், பெருமானார் யூதர்களின் வார்த்தைகளை நம்ப முடியாது என்றும், புதிய உடன்படிக்கை ஒன்று செய்து கொள்ள வேண்டும் என்றும் சொல்லி அனுப்பினார்கள்.

பனூநலீர் கூட்டத்தார் அதற்குச் சம்மதிக்க வில்லை.

அவர்களில் பனூகுறைலா கூட்டத்தார் மட்டும் முஸ்லிம்களுடன் செய்துகொண்ட

பழைய உடன்படிக்கையைப் புதுப்பித்துக் கொண்டார்கள்.

பனூநலீர் கூட்டத்தார் இரண்டாவது தடவையும் பெருமானார் அவர்களுக்கு ஒரு தூது அனுப்பினார்கள்.

அதாவது: தங்களுக்கு இஸ்லாத்தைப் போதிப்பதற்காக முஸ்லிம்களில் மூன்று பேரையாவது கூட்டிக்கொண்டு வரவேண்டும் என்றும் தாங்களும் தங்களுடைய மதகுருக்கள் மூவரைக் கூட்டிக்கொண்டு வருவதாகவும், அந்த மதகுருக்கள் இஸ்லாத்தைத் தழுவுவதாயிருந்தால், தாங்களும் அவ்வாறே செய்வதாயும் சொல்லி அனுப்பினார்கள்.

பெருமானார் அவர்களும் அதற்குச் சம்மதித்துச் சென்றபோது அவர்களின் உயிருக்கே ஆபத்து விளைவிக்க யூதர்கள் சூழ்ச்சி செய்திருக்கிறார்கள் என உறுதியான செய்தி கிடைத்ததால் உடனே திரும்பி விட்டார்கள்.

## 37. வழிகாட்டிய ஒளி

பெருமானார் அவர்கள் கட்டளையிடுவார்களானால், அவர்கள் உத்தரவைச் சிரமேற்

கொண்டு நிறைவேற்றுவதற்கு எத்தனையோ பேர் ஆவலுடன் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், நாயகம் அவர்களோ மற்றவர்களைப் போலவே கடினமான வேலைகளையும் செய்தார்கள். தங்களைப் பின்பற்றுபவர் களுக்கும் அவ்வாறே உழைத்துப் பாடுபட வேண்டும் என்பதைக் காட்டுவதற்கே அவ்வாறு செய்தார்கள்.

அவர்கள் அரசர்களுக்கெல்லாம் மேலான அரசராக இருந்தது போலவே, உழைத்து வேலை செய்வதிலும் சிறப்பான திறமை வாய்ந்தவர் களாக இருந்தார்கள். அவர்களுடைய வாழ்க்கையில் அதுவும் சிறப்புமிக்க ஒரு பகுதியாக இருந்தது.

தோழர்கள் அகழ் வெட்டிக்கொண்டிருக்கும் போது கடினமான பாறை ஒன்று குறுக்கிட்டது. ஒவ்வொருவராக அதை வெட்டிப் பார்த்தார்கள். ஆனால், அதை உடைக்க இயலவில்லை. அதனால் மனம் தளர்ந்த தோழர்கள் அந்தப் பாறையை விட்டுவிட்டு, வேறு பக்கமாக வெட்டலாம் என்ற எண்ணத்தில், பெருமானார் அவர்களிடம் உத்தரவு கேட்டார்கள். பெருமானார் மற்றவர்களிடமிருந்து குந்தாலியை வாங்கி, அகழக்குள் இறங்கி நின்று அந்தப் பாறையின்

மீது ஓங்கி அடித்தார்கள். உடனே அது பிளந்தது. அப்போது அப்பிளவிலிருந்து ஓர் ஒளி வீசியது! அதைக் கண்டு, நாயகம் அவர்கள் “அல்லாஹு அக்பர்” என்று சொன்னதும், அங்கிருந்த தோழர்கள் அனைவரும் “அல்லாஹு அக்பர்” என உரக்க முழங்கினார்கள்.

பெருமானார் அவர்கள் “எனக்கு ஷாம் தேசத்தின் திறவுகோல்கள் கொடுக்கப்பட்டன” என்று கூறிவிட்ட, இரண்டாவது முறையும் பாறை அதிகமாகப் பிளவு பட்டது. முன்போலவே அதிலிருந்து ஒளி வீசியது. பெருமானார் அவர்கள், “அல்லாஹு அக்பர்” எனக்குப் பாரசீக நாட்டின் திறவுகோல்கள் கொடுக்கப்பட்டன” என்று கூறினார்கள். மூன்றாவது முறை உடைக்கவும் பாறை பிளவுண்டு, முன்போலவே ஒளி வீசியது. பெருமானார் அவர்கள், எனக்கு ஏமன் நாட்டின் திறவு கோல்கள் கொடுக்கப்பட்டன” என்று சொன்னார்கள்.

பின்னர் பெருமானார் அவர்கள் கண்ட காட்சியை விளக்கிக் கூறினார்கள்:

“முதலாவதாக, ரோமபுரிச் சக்கரவர்த்தியான கெய்ஸருடைய ஷாம் மாகாணத்திலுள்ள அரண்மனையும், இரண்டாவதாக, மதாயின்

என்னும் நகரத்திலுள்ள பார்ஸி தேசத்துச் சக்கரவர்த்தியான கிஸ்ராவின் அரண்மனையும், மூன்றாவதாக, ஏமன் நாட்டுத் தலைநகரான ஸன் ஆ பட்டணத்தின் அரண்மனையும் காட்டப்பட்ட தாகவும், அதே சமயம் ஜிப்ரீல் என்னும் தேவதூதர் வந்து அவர்களைப் பின்பற்றி அந்தத் தேசங்களை ஜெயிப்பார்கள் என்று அறிவித்ததாயும்" சொன்னார்கள்.

ஆனால் இம் முன்னறிவிப்பு வெளியான சந்தர்ப்பம் முஸ்லிம்களுக்கு மிகவும் நெருக்கடியான தாயிருந்தது குறிப்பிடத் தக்கதாகும்.

## 38. தளராத உறுதி

தங்களுடைய படைகளை மூன்று பிரிவுகளாகப் பிரித்து குறைஷிகள் மதீனா நகரத்தின் மூன்று புறங்களைத் தாக்கினார்கள்.

ஆரம்பத்தில், முஸ்லிம் படையில் முனாபிக்கு களும் சேர்ந்திருந்தார்கள். அப்பொழுது குளிர்காலமாயிருந்தது. உணவும் போதிய அளவு கிடைக்கவில்லை. தவிர இரவில் கண் விழித்திருக்க வேண்டியதிருந்தது. மேலும் பகைவர்களின் படையோ எண்ணிக்கையில் பன்மடங்கு அதிகமாயிருப்பதையும் கண்டு

முனாபிக்குகள் தப்பித்துச் செல்ல வழி பார்த்தார்கள். தங்களுடைய வீடுகள் பாதுகாப்பற்று இருக்கின்றன' என்றும் "அவற்றைப் பாதுகாக்க தாங்கள் போக வேண்டியது அவசியம்" என்றும் காரணம் கூறி, பின்வாங்கிச் செல்லத் தொடங்கினார்கள்.

ஆனால், பகைவர்களின் மிகுந்த படை பலத்தைக் கண்டு, உண்மையான முஸ்லிம் களுக்கு ஊக்கம் அதிகரித்தது.

முற்றுகை கடுமையாக இருந்தது. அப்போது சில வேளைகளில் நபி பெருமானாரும் தோழர்களும் தொடர்ந்து மூன்று வேளையும் பட்டினிக் கிடக்க நேரிட்டது.

ஒருநாள், தோழர்களில் சிலர் பசியினால் வாடி வருந்திப் பெருமானார் அவர்களிடம் வந்து தங்கள் வயிற்றைத் திறந்து காட்டினார்கள். ஒவ்வொருவருடைய் வயிற்றிலும் ஒரு கல் வைத்துக் கட்டப்பட்டிருந்தது.

அப்போது பெருமானார் அவர்கள் தங்கள் வயிற்றைக் காட்டினார்கள். அதில் மூன்று கற்கள் வைத்துக் கட்டப்பட்டிருந்தன.

அரபி தேசத்தில், பசி வேளையில் குறுக்கு வளையாமல் இருப்பதற்காக, மக்கள் வயிற்றில் கல்லை வைத்துக் கட்டிக் கொள்வது அக்காலத்தில் வழக்கமாயிருந்தது.

## 39. தோல்வியும் தண்டனையும்

அகழ்ச் சண்டை முடிவானதும், படைகள் ஆயுதங்களைக் கீழே வைக்காமல் பனூகுறைலா கூட்டத்தார் வசிக்கும் இடத்துக்குச் செல்லுமாறு பெருமானார் அவர்கள் உத்தர விட்டார்கள்.

அவர்கள் சமாதானத்துக்கு வருவதாயிருந்தால், போதிய காரணத்தைக் கொண்டு அவர்களுடன் சமாதானம் செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் அங்கு சென்றார்கள்.

ஆனால், யூதர்கள் சண்டை செய்வது என்றே தீர்மானித்து விட்டனர்.

அலீ அவர்கள் முஸ்லிம் படைகளுக்கு முன், யூதர்களின் கோட்டைக்கு அருகில் சென்றபோது, பெருமானார் அவர்களை யூதர்கள் பகிரங்கமாக நிந்தனை செய்தார்கள்.

அவர்களுடைய கோட்டைகள் முற்றுகை இடப்பட்டன.

ஒரு மாதம் வரை முற்றுகை நீடித்தது.

இறுதியில், யூதர்கள் பணிந்து, ஸஅத்-இப்னு-முஆத் ஏற்படுத்தும் நிபந்தனைகளை ஏற்பதாக ஒப்புக்கொண்டனர்.

குறைலா கூட்டத்தாருக்கும் ஸஅத் குடும்பத்துக்கும் வெகு காலமாக நட்பு இருந்து வந்தது. அதைக் கருதி, தங்களுக்குச் சாதகம் செய்வார் என்ற எண்ணத்தில், அவர்கள் ஏற்படுத்தும் நிபந்தனையை ஒப்புக் கொள்வதற்கு முன்வந்தனர்.

மிகவும் நெருக்கடியான சந்தர்ப்பத்தில் யூதர்கள் துரோகம் செய்தது ஸஅத் அவர்களுக்கு அளவற்ற வருத்தத்தை அளித்தது.

ஸஅத் அவர்கள் யூதர்களுடைய வேதக் கட்டளை அனுசரித்துத் தீர்ப்பளித்தார்கள். பெருமானார் அவர்களும் அதற்கு சம்மதித்தார்கள்.

ஸஅத் வழங்கிய தீர்ப்பு:

1. சண்டை செய்வதற்குச் சக்தியுள்ள ஆண்களுக்கு மரண தண்டனை
2. பெண்கள், பிள்ளைகளுக்குச் சிறை தண்டனை

3.பொருள்கள் பறிமுதல் செய்யப்பட வேண்டும்.

பெருமானார் அவர்களின் தீர்ப்பின்படி நடப்பதற்கு யூதர்கள் சம்மதித்திருந்தால், முன்னர் பனூநலீர் கூட்டத்தாருக்குச் செய்த தீர்மானப்படியே செய்திருப்பார்கள்.

(யூதர்களுடைய வேதமான தௌராத்தில், பகைவர்களிடம் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என கூறப்பட்டுள்ளதோ அவ்வாறே ஸஅத் தீர்மானித்தார்).

யூதர்களில் நானூறு பேர்கள் கொல்லப் பட்டனர். கோட்டை மதில் மீது இருந்து ஒரு பெரிய கல்லை, ஒரு முஸ்லிம் மீது போட்டுக் கொன்றதற்காக ஒரு பெண்ணும் கொல்லப் பட்டாள்.

அடுத்து, கொல்லப்பட்டவர்களில் பனூநலீர் கூட்டத்தின் தலைவர் ஹுயய்-இப்னு-அக்தப் ஒருவர். முஸ்லிம்களுடன் ஏற்பட்டிருந்த உடன்படிக்கைக்கு மாறாக, நெருக்கடியான சந்தர்ப்பத்தில் அவர்களைக் கைவிட்டு அவர்களுக்கு விரோதமாகச் சண்டை செய்யுமாறு

பனூகுறைலா கூட்டத்தாரைத் தூண்டியவர் அவரே. அதைத் தவிர அவருடைய கூட்டத்தாருடன் மதீனாவை விட்டு வெளியேறி, கைபருக்குக் போகும்போது, பெருமானார் அவர்களுக்கு விரோதமாக ஒருவருக்கும் உதவி புரிவதில்லை என்பதாக ஆண்டவன் சாட்சியாகக் குறிப்பிட்டு உடன்படிக்கை செய்திருந்தார்.

(உடன்படிக்கையின்படி அவர் நடந்து கொள்ளவில்லை என்பதை முன் நிகழ்ச்சிகள் எடுத்துக் காட்டும்).

அவரைக் கொல்வதற்காகக் கொண்டு வந்து நிறுத்தியபோது தம் குற்றத்தை உணர்ந்து, பெருமானார் அவர்களிடம், “ஆண்டவன் பேரில் சத்தியமாகச் சொல்லுகிறேன் உங்களுடன் ஏன் விரோதம் செய்து கொண்டேன் என்பதைப்பற்றி எனக்கு வருத்தம் இல்லை. ஆனால், ஆண்டவனை விட்டு எவன் விலகுகிறானோ, அவனை ஆண்டவனும் கைவிடுகிறான் என்ற உண்மையை இப்பொழுது அறிந்து கொண்டேன்” என்றார்.

* * *

ஹிஜ்ரீ ஐந்தாவது, ஆறாவது வருட மத்தியில், சில சிறிய சண்டைகள் நிகழ்ந்தன.

முன்னர், முஸ்லிம்களில் பத்துப் பேரை வஞ்சித்துக் கூட்டிக்கொண்டு போய் ரஜீஅ என்னும் இடத்தில் அவர்களைக் கொலை செய்த கூட்டத்தாரைத் தண்டிப்பதற்காகப் பெருமானார் அவர்கள் தோழர்களுடன் அங்கே சென்றார்கள்.

அவர்கள் வருவதை அறிந்த அக்கூட்டத்தார் அருகில் இருந்த மலையில் போய் ஒளிந்து கொண்டார்கள்.

முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்ட இடத்தில் பெருமானார் அவர்கள் தங்கியிருந்து, அவர்களுக்காக ஆண்டவனிடம் வேண்டுதல் செய்துவிட்டுத் திரும்பி விட்டார்கள்.

## 40. கருணை மிகுந்த உள்ளம்

நபி பெருமானார், பகைவர்களிடத்தில் எத்தகைய கருணை காட்டினார்கள் என்பதை பல நிகழ்ச்சிகள் மூலம் அறியலாம்.

முஸ்லிம்களுக்கும் பனூஹனீப் கோத்திரத் தாருக்கும் நிகழ்ந்த சிறிய சண்டையில் அக்கூட்டத்

தலைவர் துமாமா என்பவர் முஸ்லிம்களிடம் சிறைப்பட்டார்.

பெருமானார் அவர்களின் முன்னிலையில் துமாமாவைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள். “உம்மை எவ்வாறு நடத்த வேண்டும்?” என்று அவரிடம் கேட்கப்பட்ட போது அவர்:

“நீங்கள் என்னைக் கொன்று விடுவதால், முஸ்லிம்களைக் கொலை செய்த ஒருவனைக் கொன்றதாகும். ஆனால், என் மீது இரக்கம் காட்டினால் அதற்காக நன்றியறிதல் உள்ள ஒருவன் மீது கருணை காட்டியதாகும்” என்றார்.

பெருமானார் அவர்கள், உடனே அவரை விடுவிக்கும்படி உத்தர விட்டார்கள்.

உடனே துமாமா அருகில் இருந்த ஊற்றில் குளித்து விட்டுப் பெருமானார் அவர்களிட வந்து,

“ஆண்டவன் மீது சத்தியமாகச் சொல்லுகிறேன். நேற்றுவரை நான் உங்களை வெறுத்ததைப் போல் இவ்வுலகில் வேறு எவரையும் வெறுத்த தில்லை. ஆனால் இன்றோ உங்களுடைய முகத்தைப் போல் அவ்வளவு ஒளி மிகுந்ததாக வேறு எதுவும் எனக்குத் தோன்றவில்லை. மற்றும்,

உங்களுடைய மார்க்கத்தை வெறுத்ததைட் போல் வேறு எதையும் வெறுக்கவில்லை. ஆனால் இன்றோ எனக்கு அதை விடச் சிறந்தது வேறு எதுவும் இல்லை" என்று கூறி இஸ்லாத்தைத் தழுவினார்.

அதன் பின்னர், துமாமா மதீனாவிலிருந்து நேராக மக்காவிற்குப் பயணமானார்.

குறைஷிகள் அவரைக் கண்டதும், "நீர் என்ன மதம் தவறியவர் ஆகிவிட்டீரே?" என்று கேட்டனர்.

அதற்கு அவர், "நான் மதத்தில் தவறவில்லை; ஆண்டவனுடைய தூதரின் மார்க்கத்தைத் தழுவி இருக்கிறேன்" என்று பதில் அளித்தார்.

* * *

துமாமா வாழ்ந்து வந்த யமாமா மாகாணத்திலிருந்தே மக்காவுக்குக் கோதுமை போய்க் கொண்டிருந்தது.

அவர் முஸ்லிமானதும், பெருமானார் அவர்களுடைய உத்தரவு இல்லாமல், இஸ்லாத்தின் விரோதிகளான மக்கா குறைஷிகளுக்குக் கோதுமை அனுப்ப இயலாது என்று கூறி, அதை நிறுத்திவிட்டார்.

அதனால், குறைஷிகள் மிகுந்த கஷ்டத்துக்கு உள்ளானார்கள். தங்களுக்குக் கோதுமை அனுப்புமாறு துமாமாவுக்கு கட்டளையிட வேண்டும் என பெருமானார் அவர்களை மிகவும் வேண்டிக் கொண்டனர்.

கடுமையான பகைவர்களின் வேண்டுகோளை, கருணை மிக்க பெருமானார் அவர்கள் மறுக்காமல், துமாமாவுக்குச் சொல்லி அனுப்பினார்கள். வழக்கம்போல் அவர்களுக்குக் கோதுமை கிடைத்தது.

குறைஷிகளுக்கு எவ்வளவு தயை காட்டினாலும் அவர்களோ பகைமையைக் கைவிடுவதாக இல்லை.

## 41. உண்மையும் நாணயமும் உள்ளவர்

பெருமானார் அவர்களின் மருமகன் அபுல் ஆஸ் அப்பொழுதும் முஸ்லிமாகாமல் இருந்தார்.

பத்ருப் போரின்போது சிறைப்படுத்தப்பட்ட குறைஷிகளில் அபுல் ஆஸும் ஒருவர். அவருடைய மனைவியும் பெருமானார் அவர்களின் மகளுமான ஸைனபை மதீனாவுக்கு அனுப்பி வைக்கவேண்டும் என்ற நிபந்தனையின் மீது அபுல் ஆஸ் விடுதலை செய்யப்பட்டார்.

அகழ்ச் சண்டை நடைபெற்ற சிறிது காலத்துக்குப் பின்னர், அபுல்ஆஸ் வியாபாரத்துக் காக ஷாம் தேசத்துக்குச் சென்று, அங்கிருந்து அதிகமான பொருள்களுடன் திரும்பி வந்தார்.

அப்பொழுது முஸ்லிம்களில் சிலர், அபுல் ஆஸ் மற்றும் அவரைச் சேர்ந்தவர்களையும் சூழ்ந்து, சரக்குகளைக் கைப்பற்றி, தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டனர்.

அபுல் ஆஸ், பெருமானார் அவர்களிடம் வந்து, குறைஷிகள் நம்பிக்கையாகத் தம்மிடம் விற்பனைக்காகக் கொடுத்திருப்பதாகவும், அவற்றைத் திரும்பத் தம்மிடம் தரவேண்டும் என்றும் வேண்டிக் கொண்டார்.

உடனே பெருமானார் அவர்கள் சரக்குகளை அவரிடம் திருப்பிக் கொடுத்து விடுமாறு கட்டளையிட்டார்கள். அவ்வாறே, அவை யாவும் அவரிடம் திருப்பிக் கொடுக்கப்பட்டன.

பெருமானார் அவ்ர்களின் க்ருணை, அபுல் ஆஸின் உள்ளத்தை மிகவும் நெகிழச் செய்துவிட்டது.

அபுல்ஆஸ் மக்காவுக்குச் சென்று சரக்குகளை எல்லாம் உரியவர்களிடம் சேர்ப்பித்தார். பின்னர்,

"குறைஷிகளே! உங்களுடைய சரக்குகள் ஏதாவது திருப்பித் தரப்படாமல் என்னிடம் உள்ளனவா?" என்று கேட்டார்.

"சரக்குகள் எதுவும் பாக்கி இல்லை; நீர் உண்மையானவர்; நேர்மை மிக்கவர் என்பதை அறிகிறோம். ஆண்டவன் உமக்குத் தகுந் பரிசு வழங்குவான் என்று அவர்கள் மகிழ்வோ சொன்னார்கள்.

"நான் முன்னரே இஸ்லாத்தைத் தழுவியிருப்பேன். ஆனால், உங்களுடைய சரக்குகளை அபகரிப்பதற்காகவே நான் அவ்வாறு செய்தேன் என நீங்கள் சந்தேகப்படுவீர்கள். ஆதலால், அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை; நபி அவர்கள் ஆண்டவனுடைய தூதர் என நான் உறுதி கூறுகிறேன்" என்று சொல்லி , இஸ்லாத்தைத் தழுவினார் அபுல் ஆஸ்.

## 42. ஆண்டவன் அருளிய வெற்றி

உடன்படிக்கையையும், அபூஜந்தலின் பரிதாப நிலைமையையும் கண்ட ஹல்ரத் உமர் அவர்கள் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல், பெருமானார் அவர்களிடம் சென்று "ஆண்டவனுடைய

தூதரே! தாங்கள் உண்மையான நபி அல்லவா!" என்று கேட்டார்கள்.

"நிச்சயமாக. நான் உண்மையான நபியாயிருக்கின்றேன்" என்றார்கள் பெருமானார்.

"நாம் கடைப்பிடிப்பது நேர்மையான வழி அல்லவா?" என்று கேட்டார்கள்.

"ஆம்!"

"குறைஷிகள் கடைப்பிடிப்பது தவறான வழி அல்லவா?"

"ஆம்!"

"இந்த நிலையில், மத சம்பந்தமான விஷயத்தில், நாம் எதற்காக நம்மைத் தாழ்வு படுத்திக் கொள்ள வேண்டும்?" என்று உமர் அவர்கள் கேட்டார்கள்.

அதற்குப் பெருமானார் அவர்கள், "நான் அல்லாஹ்வினுடைய தூதன். அவனுடைய கட்டளைக்கு மாறாக எதுவும் செய்ய முடியாது" என்று பதில் கூறினார்கள்.

அதைக் கேட்டதும் உமர் அவர்கள் மிகுந்த வருத்தத்தோடு அபூபக்கர் அவர்களிடம் சென்று நிகழ்ந்தவற்றை விவரித்துக் கூறினார்கள்!

அப்பொழுது அபூபக்கர் அவர்கள், “பெருமானார் அவர்கள் ஆண்டவனுடைய நபி; அவர்கள் எதைச் செய்தாலும் ஆண்டவனுடைய கட்டளைப்படியே செய்வார்கள்” என்று சொன்னார்கள்.

அதன் பின்னர், பெருமானார் அவர்களிடம் மறுத்துப் பேசிய குற்றத்தை உமர் அவர்கள் நினைத்து, நினைத்து தங்கள் ஆயுள் வரை வருந்திக்கொண்டே இருந்தார்கள். அக்குற்றத் துக்குப் பரிகாரமாக, தொழுவதிலும், நோன்பு நோற்பதிலும், சிறப்பான தர்மங்களைச் செய்வ திலும் அடிமைகளை விடுதலை செய்வதிலும் கவனம் செலுத்திக் கொண்டிருந்தனர்.

இதர முஸ்லிம்களுக்கும் அபூஜந்தலின் நிலைமையைக் கண்டு மிகுந்த கவலை உண்டாயிற்று. ஆனால், பெருமானார் அவர்களின் கட்டளையானதால் ஒன்றும் பேச இயலவில்லை.

பெருமானார் அவர்கள் அதன்பின் குர்பானியும் அதைச் சேர்ந்த சடங்குகளையும் அங்கே நிறைவேற்றினார்கள்.

உடன்படிக்கை நிறைவேறியதும் மூன்று நாட்கள் ஹுதைபிய்யாவிலேயே பெருமானார்

அவர்கள் இருந்தார்கள். அதன்பின் அவர்கள் மதீனாவுக்குப் புறப்பட்டுச் சென்றார்கள்.

வழியிலேயே, இறைவாக்கு அருளப்பெற்றது.

"(நபியே) நிச்சயமாக நாம் ஒரு தெளிவான வெற்றியாக உமக்கு வெள்ளி அளித்துள்ளோம்....."

பெருமானார் அவர்கள், உமர் அவர்களை அழைத்து, அச்செய்தி யைத் தெரிவித்தார்கள்.

அதைக் கேட்டதும் உமர் அவர்கள் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தார்கள்.

## 43. பெருமானார் அவர்களின் பெருமை

பெருமானார் அவர்கள் இரண்டரை ஆண்டு களுக்குப் பின், மக்காவுக்குப் போகும்போது பதினாயிரம் முஸ்லிம்களும் சென்றார்கள். முன்னர், போகும்போது ஆயிரத்தி நானூறு பேர்களே சென்றார்கள். குறுகிய காலத்தில் இவ்வளவு தொகையினர் இஸ்லாத்தில் எவ்வாறு சேர்ந்தனர்?

முஸ்லிம்களுக்கும் காபிர்களுக்கும் மத்தியில் ஓயாமல் சண்டை-சச்சரவு நிகழ்ந்து வந்ததால், ஒருவரோடு ஒருவர் நெருங்கிப் பழக வாய்ப்பு இல்லாமல் இருந்தது.

ஹுதைபிய்யா உடன்படிக்கைக்குப் பிறகு, அவர்களுக்குள் போக்குவரவு உண்டாயிற்று. வியாபாரத் தொடர்புக்காகவும், குடும்ப சம்பந்தமாகவும் காபிர்கள் அடிக்கடி மதீனாவுக்கு வந்தார்கள்; அங்கே சில காலம் தங்கினார்கள். அப்பொழுது அவர்கள் முஸ்லிம்களுடன் நெருங்கிப் பழகி வந்தார்கள்; அதனால், இஸ்லாத்தைப் பற்றி நன்கு அறிந்து கொண்டார்கள். பெருமானார் அவர்களின் மேன்மையும், எளிமையும், நற்செய்கைகளும் சிறப்பாகக் கண்முன் காணும் வாய்ப்பு அவர்களுக்கு உண்டாயிற்று. இவை யாவும் குறைஷிகளின் உள்ளத்தில் பசுமையாகப் பதிந்து, ஒரு புத்துணர்ச்சியை உண்டாக்கிற்று.

இஸ்லாத்தின் கொள்கைகள் குறைஷிகளை ஈர்த்தன. கூட்டம் கூட்டமாக அவர்கள் இஸ்லாத்தைத் தழுவினார்கள்.

இவ்வளவு அதிகமான பேர் இதற்கு முன் ஒரு பொழுதும் வந்து சேரவில்லை.

குறைஷிகளில் பிரபலமான வீரரும், உஹுத் சண்டையின்போது, முஸ்லிம்கள் அதிக இழப்புக்கு முக்கியகாரணமாயிருந்தவர்களுமான

காலிதுப்னுவலீது, அம்ருப்னுல் ஆஸ் ஆகியோர் இக்காலத்தில் இஸ்லாத்தில் சேர்ந்தார்கள்.

## 44. ஆண்டவன் வழி காட்டுவான்

எனினும், உடன்படிக்கையின்படி, மக்காவிலே தங்கியிருந்த முஸ்லிம்களை குறைஷிகள் கொடுமைப்படுத்தி துன்பத்துக்கு ஆளாக்கினார்கள்.

அந்தத் துன்பத்திலிருந்து தப்புவதற்காகப் பலர் மதீனாவுக்கு வரத் தொடங்கினார்கள். அவ்வாறு முதன்முதலில் வந்தவர் உத்பதுப்னு உஸைது என்னும் அபூபஸீர் ஆவார்.

அவர் மதீனாவுக்குப் போய்விட்ட செய்தியை அறிந்த குறைஷிகள் அவரைத் திரும்ப அழைத்து வருவதற்காக, இருவரைப் பெருமானார் அவர்களிடம் அனுப்பினார்கள்.

பெருமானார் அவர்கள், அவரை மக்காவுக்குத் திரும்பிச் செல்லுமாறு கட்டளையிட்டார்கள்.

அப்பொழுது அவர் பெருமானார் அவர்களிடம், “குப்ரில் சேருமாறு நிர்ப்பந்திக்கும் காபிர்களிடமா, என்னைப் போகச் சொல்லுகிறீர்கள்?” என்று கேட்டார்.

பெருமானார் அவர்கள், அபூ பஸீர்! உமக்கும் உம்மைப் போன்ற நிராதனவானவர்களுக்கும் நிச்சயமாக, ஒரு வழி செய்வான்" என்று கூறி, அவரை குறைஷித் தூதர்களுடன் அனுப்பி விட்டார்கள்.

அபூபஸீர் தூதர் இருவருடன் மக்காவுக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தபோது, அத்தூதர் களில் ஒருவரை வாளால் வெட்டி வீழ்த்தினார். மற்றொருவர் அதைப் பார்த்து மதீனாவுக்கு ஓடிவந்து பெருமானார் அவர்களிடம் நிகழ்ந்ததைக் கூறி முறையிட்டார்.

அப்பொழுது அபூபஸீரும் திரும்பி மதீனாவுக்கு வந்து விட்டார்.

அவர் பெருமானார் அவர்களிடம், "உடன் படிக்கைப்படி தாங்கள் என்னை அனுப்பி விட்டீர்கள். பிறகு நிகழ்ந்ததற்குத் தாங்கள் பொறுப்பு இல்லை" என்று கூறி விட்டு வெளியே போய்விட்டார்.

## 45. இஸ்லாத்தை உலகுக்கு அறிவித்தல்

மக்கா வாசிகளுக்கும் முஸ்லிம்களுக்கும் இருந்து வந்த சச்சரவு உடன்படிக்கையின் மூலம் ஓரளவு ஓய்ந்து, சமாதானம் ஏற்பட்டதும்

இஸ்லாத்தைப் பற்றி உலகத்துக்கு அறிவிக்கப் பெருமானார் அவர்கள் எண்ணினார்கள்.

அதற்காக, தோழர்களை எல்லாம் கூட்டி சொற்பொழிவு ஒன்று நிகழ்த்தினார்கள்.

"ஆண்டவன் என்னை உலக முழுவதற்கும் அருளாகவும், தூதனாகவும் அனுப்பியுள்ளான். ஹஸ்ரத் ஈசா அவர்களின் சீடர்களைப்போல், உங்களுக்குள் வேற்றுமை எதுவும் இருக்கக் கூடாது. என் சார்பாக, நீங்கள் போய் ஆண்டவனின் தூதை நிறைவேற்றுங்கள். உண்மையை உணருமாறு மக்களை அழைப்பீர்களாக" என்பதாக இறுதியில் குறிப்பிட்டார்கள்.

ரோமாபுரி அரசர் கெய்ஸர் (ஸீஸர்) பாரசீக அரசர் குஸ்ருபர்வேஸ், எகிப்து அரசர் முகௌகீஸ், அபிசீனியா அரசர் நஜ்ஜாஷீ ஆகியோருக்கு இஸ்லாத்தின் பெருமையை எடுத்துக்கூறி, அதில் சேருமாறு கடிதம் எழுதி, தனித்தனியே தூதர்கள் மூலம் பெருமானார் அவர்கள் அனுப்பி வைத்தார்கள்.

## 46. பெருமானார் அவர்களின் முத்திரைக் கடிதம்

மிஸ்று ஆட்சித் தலைவருக்குப் பெருமானார் அவர்கள் எழுதிய கடிதத்தை அவர் பத்திரப்

படுத்தி வைத்திருந்ததை இஸ்லாமிய வரலாறுகள் குறிப்பிடுகின்றன.

1853-ம் ஆண்டில் பிரெஞ்சு உல்லாசப் பயணிகள் சிலர், மிஸ்று (எகிப்து) தேசத்தில் சுற்றுலாச் சென்ற போது, ஒரு கிறிஸ்துவ மடத்தில் பெருமானார் அவர்களின் மேற்படி கடிதம் அகப்பட்டது. அதில் உள்ள எழுத்துக்கள் அக்காலத்திய அரபி எழுத்தில் எழுதப்பட்டிருந்தன. டாக்டர் பாட்ஜர் என்பவர் அதைப் பிரித்து எடுத்து இக்காலத்திய எழுத்தில் எழுதினார்.

அதில் காணப்படும் வாசகத்துக்கும், இஸ்லாமிய வரலாற்றில், மிஸ்று தேச அரசருக்கு எழுதப்பட்டதாகக் கூறப்படும் வாசகத்துக்கும் கொஞ்சம்கூட வேறுபாடு இல்லை.

அக்கடிதத்தின் இறுதியில், "முஹம்மதுர் ரஜூ லுல்லாஹ்" என்ற முத்திரை ஒன்று இடப்பட்டிருக்கிறது. வரலாறுகளிலும் அவ்வாறு முத்திரையிடப் பெற்றதாகக் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

அக்கடிதம் இப்பொழுது கான்ஸ்டாண்டி நோபில் அரண்மனையில் இருக்கிறது.

## 47. பெருமானார் அவர்களின் கடைசிப் போர்

கெய்ஸரின் ஆட்சிக்கு உட்பட்ட தவ்மத்துல் ஜந்தல் என்ற நாட்டின் சிற்றரசரான அக்கீதர் முஸ்லிம்களுக்குப் பகைவராக இருந்து வந்தார்.

அவரை அடக்கி வருமாறு காலித் அவர்களின் தலைமையில் நானூறு வீரர்களைப் பெருமானார் அவர்கள் அனுப்பி வைத்தார்கள்.

படையினர் அங்கே சென்று, அக்கீதருடைய நாட்டைத் தாக்கி, அந்தச் சிற்றரசரைச் சிறைப் பிடித்தார்கள்.

அந்த அரசர், பெருமானார் அவர்களின் முன்வந்து உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையின்மீது அவரை விடுவித்தனர்.

சில நாட்களுக்குப் பின், அவ்வரசரும் அவருடைய சகோதரரும் மதீனாவில் பெருமானார் அவர்களிடம் தஞ்சம் அடைந்து, ஆதரவுத் தேடிக் கொண்டார்கள்.

தபூக்கில் இருபது நாட்கள் வரை பகைவர்களின் நடமாட்டம் காணப்படவில்லை. எல்லைப்புறப் பகுதி அமைதியாகத் தென்பட்டது.

இவற்றை அறிந்த பெருமானார் அவர்கள் மதீனாவுக்குத் திரும்பி விட்டார்கள்.

பெருமானார் அவர்கள் நேரில் சென்று கலந்து கொண்ட போர்களில் இதுவே கடைசியானது.

பெருமானார் அவர்கள் மதீனாவுக்கு அருகில் வந்ததும், மக்கள் அனைவரும் நகரத்துக்கு வெளியே வந்து, மிகவும் ஆர்வத்துடன் அவர்களை வரவேற்று உபசரித்தனர்.

## 48. பெருமானார் அவர்கள் கூறிய அறிவுரை

முன்பு முஸ்லிம் மதப் பிரச்சாரகர்களுக்கு அரேபிக் கூட்டத்தார் இடையூறு உண்டாக்கிக் கொண்டிருந்தார்கள். இஸ்லாத்தைப் பற்றி போதனை செய்யச் சென்ற பல பிரச்சாரகர்கள் அரேபியர்களால் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

மக்காவை வெற்றி கொண்டபின், அந்தப் பயமானது அறவே நீங்கிவிட்டது. அதன்பின், பெருமானார் அவர்கள் அரேபியாவின் பல பகுதிகளுக்கும் இஸ்லாமியப் பிரச்சாரகர்களை அனுப்பினார்கள். அவ்வாறு அனுப்பப்படுபவர் களைப் பெருமானார் அவர்கள் சோதித்துத் தேர்வு செய்த பிறகே அனுப்புவார்கள்.

திருக்குர்ஆனை நன்கு மனப்பாடம் செய்தவர் களையே பிரச்சாரகர் கூட்டத்துக்கு தலைமை வகிக்கும்படி செய்வார்கள்.

பெருமானார் அவர்கள் ஒரு சமயம் பிரச்சாரகர் களை அனுப்ப எண்ணியபோது, அவர்கள் ஒவ்வொருவரையும் அழைத்துத் அனுப்பி வைத்தார்கள்.

அவர்களை அனுப்புமுன் அவர்கள் கைக் கொள்ள வேண்டிய முறைகளை பெருமானார் அவர்கள் போதித்தார்கள்.

பெருமானார் அவர்கள் கூறியவை:

பெருமானார் அவர்கள், அவர்களுக்குச் செய்த போதனையானது, இஸ்லாமியப் பிரச்சாரத்தின் அடிப்படைக் கொள்கைகளாகும்.

"நீங்கள் காந்தமாகப் பணி செய்ய வேண்டும். பலாத்காரம் செய்யக் கூடாது. மக்களுக்குச் சிறந்த கருத்துகளை எடுத்துரைக்க வேண்டும்: அவர்களுக்கு வெறுப்பு உண்டாகுமாறு நடக்கக் கூடாது. நீங்கள் இருவரும் ஒற்றுமையாக இருந்து வேலை செய்யவேண்டும். வேறு மதத்தவர்களையும் நீங்கள் அங்கே சந்திக்கக்கூடும். அவர்களைக் காண்பீர்களானால்,

முதலாவதாக, ஆண்டவன் ஒருவன் என்பதையும் நான் அவனுடைய தூதன் என்பதையும், நீங்கள் அவர்களுக்கு அறிவுறுத்துங்கள். அவர்கள் அவற்றை ஒப்புக்கொண்டால், "இரவிலும் பகலிலும் ஐந்து நேரத் தொழுகையை ஆண்டவன் உங்கள்மீது கடமையாக்கி இருக்கிறான்" என்று கூறுங்கள். அவர்கள் அதை அங்கீகரித்த பின், "தருமம் செய்ய வேண்டியது உங்கள் மீது கடமையாயிருக்கும். உங்களில் செல்வர்களிட மிருந்து நிதி வசூலித்து, ஏழைகளுக்குக் கொடுக்கப்படும்" என்று சொல்லுங்கள். எவரையும் கொடுமைப்படுத்தாதீர்கள். ஏனெனில் கொடுமைப்படுத்தப்பட்டோர் பிரார்த்தனைக்கும் ஆண்டவனுக்கும் மத்தியில் திரை ஒன்றும் இல்லை."

## 49. நேரில் வந்து கண்டு மகிழ்ந்தனர்

பெருமானார் அவர்களுடைய கட்டளைகளை சிரமேற் கொண்டு, முஸ்லிம் பிரச்சாரகர்கள் பல பகுதிகளுக்கும் சென்று, இஸ்லாத்தைப் பற்றி போதனை செய்து வந்தார்கள்.

அவர்களுடைய போதனையால் பல கூட்டத்தார் ஆங்காங்கே இஸ்லாத்தைத் தழுவினார்கள்.

அக்கூட்டத்தினர் இஸ்லாத்தில் சேர்ந்ததோடு தாங்கள் இஸ்லாத்தில் சேர்ந்திருப்பதை, அறிவிப்பதற்காக வேண்டிக் கூட்டம் கூட்டமாகப் பெருமானார் அவர்களிடம் தூது வந்தார்கள்.

சில கூட்டத்தாருக்கு, இஸ்லாத்தின் மீது ஆரம்பத்திலிருந்த வெறுப்பும், பகைமையும் நீங்கியது. பெருமானார் அவர்களின் வாயிலாக, நேரில் இஸ்லாத்தின் சிறப்பை நன்கு அறிந்து கொள்ள வேண்டும் என்ற அவாவுடன் மதீனாவுக்கு வந்தார்கள், பெருமானார் அவர்களைக் கண்டு மகிழ்ந்து உரையாடி இஸ்லாத்தைத் தழுவினார்கள்.

ஹிஜ்ரி ஒன்பதாவது வருடத்திலேதான் அத்தகைய தூதுக் குழுக்கள் அதிகமாக வந்தன. ஆகையால், அந்த வருடத்திற்கு வரலாற்றுப் பேராசிரியர்கள் "தூது வருடம்" எனப் பெயர் சூட்டியிருக்கிறார்கள்.

## 50. ஆடம்பரமும் அகம்பாவமும் அடங்கியது

பனூதமீம் என்னும் கோத்திரத்தார் மிகவும் ஆடம்பரத்தோடு மதீனாவுக்கு வந்து, நேராகப் பள்ளி வாசலுக்குச் சென்றார்கள். முக்கிய

மானவர்கள் பலரும் அக்கூட்டத்தில் சேர்ந்து தூது வந்திருந்தார்கள்.

இஸ்லாத்தில் சேர வேண்டும் என்ற நோக்கத்தோடு அவர்கள் வந்திருந்த போதிலும் அவர்களுக்கு இயல் பாயுள்ள ஆடம்பரமான அகம்பாவம் மேலோங்கி இருந்தது.

பள்ளிவாசலை ஒட்டியுள்ள பெருமானார் அவர்களின் இல்லத்தின் முன் நின்று, "முஹம்மதே வெளியே வாருங்கள்" என்று கண்ணியமின்றி அழைத்தார்கள்.

பெருமானார் அவர்கள் வெளியே வந்தார்கள்.

அப்போது அக்கூட்டத்தார், பெருமானார் அவர்களிடம், "முஹம்மதே! எங்களுடைய பெருமையை எடுத்துச் சொல்வதற்காக நாங்கள் உங்களிடம் வந்திருக்கிறோம்; எனவே, எங்கள் கவிஞருக்கும், பிரசங்கிக்கும் அனுமதி கொடுங்கள்" என்றார்கள்.

பெருமானார் அவர்கள் அதற்குச் சம்மதித்தார்கள்.

தங்கள் கூட்டத்தாரிடம் வாக்கு திறமையுள்ள உதாரிது என்பவரை அழைத்து, தங்கள் பெருமையை எடுத்துச் சொல்லும்படி கூறினார்.

உதாரிது எழுந்து, "புகழனைத்தும் இறைவனுக்கே! அவனே புகழுக்கு உரியவன். அவனுடைய கருணையினாலேயே எங்களை அரசர்களாக்கித் திரண்ட செல்வங்களுக்கு அதிபதிகளாக்கினான். கீழ்த்தேசத்தில் இருக்கும் எல்லாக் கூட்டத்தார்களிலும் எங்களை வலிமையிலும் எண்ணிக்கையிலும் அதிகமாக்கினான். இன்று எங்களுக்குச் சமமாக யார் இருக்கின்றனர்? பதவியில் எங்களுக்கு இணையாக யாராவது இருப்பார்களானால், அவர்கள் தங்கள் பெருமையை எடுத்துக் கூறலாம்." என்று கூறி அமர்ந்தார்.

அதற்குப் பெருமானார் அவர்கள் தாபிதுப்னு கைஸ் அவர்களை நோக்கி; "எழுந்து அந்த மனிதரின் உரைக்கு பதில் கூறும்" என்று சொன்னார்கள்.

தாபித் எழுந்து, "வானங்களையும் பூமியையும் படைத்த ஆண்டவனுக்கே புகழ் எல்லாம் உரித்தானது... அவன் நமக்கு அரசை அருளினான். தன் படைப்பில் சிறந்தவர்களைத் தேர்ந்து தன் தூதராக்கினான். அவர்கள் உயர்ந்த வம்சத்தைச் சேர்ந்தவர்கள். அனைவரிலும் அவர்கள் சத்திய வாக்கும், ஒழுக்கமும்

உள்ளவர்கள். அதனாலேயே ஆண்டவன் தன்னுடைய வேதத்தை அவர்களிடம் அருளினான். அவர்கள் மக்களை இஸ்லாத்தின் பக்கம் அழைத்தார்கள். அப்போது எல்லோருக்கும் முதன்மையாய் முஹாஜிர்களும், அடுத்தபடியாக அன்ஸாரிகளாகிய நாங்களும் அவர்களின் அழைப்பை ஏற்றுக் கொண்டோம். நாங்கள் ஆண்டவனுடைய வழியில் உதவியவர்களாயும், நபித்துவத்திற்கு அமைச்சர்களாயும் இருக்கின்றோம்' என்று கூறி முடித்தார்கள்.

அதன்பின், தமீம் கூட்டத்தாரைச் சேர்ந்த ஸிப்ரிகான் என்ற கவிஞர் தம் கருத்தைக் கவிதையில் பாடினார்.

அவருக்கு எதிராக, முஸ்லிம் ஹஸ்ஸான் கவிதை பாடினார்.

வாக்கு வன்மையிலும், கவி பாடுவதிலும் பெருமானார் அவர்களிடம் இருப்பவர்களே மேலானவர்கள் என்று ஒப்புக் கொண்டனர். ஆடம்பரமும் அகம்பாவமும் ஒடுங்கியது. அக்கூட்டத்தார் அனைவரும் இஸ்லாத்தைத் தழுவினார்கள். அதன் பின்னர் நாயகம் (ஸல்). அவர்களுக்கு விலையுயர்ந்த அன்பளிப்புகளை வழங்கினார்கள்.

## 51. தொழுகையை நடத்தச் சொல்லுதல்

பெருமானார் அவர்களால் நடப்பதற்குச் சக்தியிருக்கும் வரை நோயுடனேயே பள்ளி வாசலுக்குச் சென்று தொழுகையை நடத்தி வந்தார்கள்.

ஒருநாள், பெருமானார் அவர்கள் குளித்து விட்டு, தொழுகைக்காகப் பள்ளிவாசலுக்குப் புறப்படும்போது, அவர்களுக்கு மயக்கம் உண்டாயிற்று. சிறிது நேரத்தில் மயக்கம் நீங்கியதும், தங்களுக்குப் பதிலாக அபூபக்கர் அவர்கள் பள்ளிவாசலில் தொழுகையை நடத்த் வேண்டும் என்று பெருமானார் அவர்கள், ஆயிஷா நாயகியார் அவர்களிடம் சொன்னார்கள்.

அதைக் கேட்டதும், "யாரஸூலல்லாஹ்! அபூபக்கர் இளகிய உள்ளமும் மெல்லிய குரலும் உடையவர்கள். தங்களுடைய இடத்தில் அவர்கள் நிற்க இயலாது. குர்ஆன் ஓதிக் கொண்டிருக்கும்போதே அவர்கள் கண் கலங்கி, உள்ளம் நெகிழுமே" என்று சொன்னார்கள்

பெருமானார் அவர்கள், "அபூபக்கரே தொழுகையை நடத்த வேண்டும்" என்று மறுமுறையும் சொன்னார்கள்.

அது முதல் சில நாட்கள் வரை அபூபக்கர் அவர்களே தொழுகையில் தலைமையாயிருந்து நடத்தி வந்தார்கள்

## 52. இறுதிச் சொற்பொழிவு

பெருமானார் அவர்களுக்கு ஒருநாள் உடல் நலமாக இருந்தது. குளித்து விட்டு, அலீ, அப்பாஸ் (ரலி) ஆகியோரின் துணையோடு பள்ளிவாசலுக்குச் சென்றார்கள்.

அப்பொழுது, பள்ளிவாசலில் ஆபூபக்கர் அவர்களே தொழுகையை நடத்திக் கொண்டிருந்தார்கள்.

பெருமானார் அவர்கள் அங்கே வருவதை அறிந்து, அபூபக்கர் அவர்கள் தங்கள் இடத்திலிருந்து விலகினார்கள் அங்கேயே நிற்கும்படி சமிக்ஞை செய்துவிட்டு, அவர்களின் பக்கமாயிருந்து பெருமானார் அவர்கள் தொழுகையை நடத்தினார்கள்.

தொழுகை முடிந்ததும் பெருமானார் அவர்கள் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

அதுவே பெருமானார் அவர்களின் கடைசிச் முன்பு இருந்த கூட்டத்தார் தங்களுடைய நபிமார்கள், பெரியோர்களின் அடக்கத்

தலங்களையே வணக்கத் தலங்களாக்கி விட்டார்கள். நீங்கள் அப்படிச் செய்யக் கூடாது. நான் அதை விலக்குகின்றேன்" என்றார்கள்.

## 53. முடிவை உணர்தல்

பெருமானார் அவர்கள் தொழுகையை முடித்து, நிகழ்த்திய இறுதிச் சொற்பொழிவில், "இவ்வுலக புாக்கியங்களையோ, அல்லது மறுமையில் ஆண்டவனிடத்தில் உள்ள வற்றையோ இவற்றில் ஒன்றைத் தேர்ந் தெடுத்துக் கொள்ளும்படியான அதிகாரத்தை ஆண்டவன் ஓர் அடியவனுக்குக் கொடுத்தான். அவ்வடியவனோ ஆண்டவனிடத்தில் உள்ள வற்றையே ஒப்புக் கொண்டான்" என்று கூறினார்கள்.

அந்தச் சொற்களைக் கேட்டவுடன் அபூபக்கர் அவர்களின் கண்களில் நீர் மல்கியது, உள்ளத்தில் வருத்தம் மேலிட்டது.

அருகில் இருந்தவர்கள், "வேறு ஒருவரைப் பற்றிக் கூறும்போது அபூபக்கர் அவர்கள் ஏன் வருந்த வேண்டும்?" என்று வியப்போடு அவர்களைப் பார்த்தார்கள்.

பெருமானார் அவர்கள், தங்கள் மரணத்தைப் பற்றியே அச்சொற்களைச் சொன்னார்கள் என்று அபூபக்கர் அவர்கள் உணர்ந்ததாலேயே அவ்வாறு அவர்களுக்கு வருத்தம் மேலிட்டது.

அதன்பின், பெருமானார் அவர்கள், "யாருடைய செல்வத்துக்கும் தோழமைக்கும் நான் அதிகமாக நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன் என்றால், அபூபக்கர் அவர்களுடைய செல்வத்துக்கும் தோழமைக்குமே ஆகும்"

"உலகில் என்னைப் பின்பற்றியவர்களில், யாரையாவது என்னுடைய முதன்மைத் தோழராக்கிக் கொள்ள வேண்டுமானால், நான் அபூபக்கரையே அவ்வாறு ஆக்கிக் கொள்வேன்"

"பள்ளிவாசலுக்கு வரும் வாயில்களில் அபூபக்கர் அவர்கள் வரும் வாயிலைத் தவிர மற்றவைகளை எல்லாம்மூடி விடுங்கள். ஆம், முன்பு இருந்த கூட்டத்தார் தங்களுடைய நபிமார்கள், பெரியோர்களின் அடக்கத் தலங்களையே வணக்கத் தலங்களாக்கி விட்டார்கள். நீங்கள் அப்படிச் செய்யக் கூடாது. நான் அதை விலக்குகின்றேன்" என்றார்கள்.

## 54. தருமம் செய்து விடுங்கள்

ஆயிஷா நாச்சியார் அவர்களிடம் நாணயங்கள் சிறிது இருப்பது பெருமானார் அவர்களுக்கு நினைவு வந்தது. எனவே அவர்களை அழைத்து; "ஆயிஷாவே! அந்த நாணயங்கள் எங்கே இருக்கின்றன? ஆண்டவனிடம் நம்பிக்கை இல்லாமலா முஹம்மது அவனைச் சந்திப்பது? போய் அவற்றை ஆண்டவனுடைய வழியில் தருமம் செய்து விடும்" என்று பெருமானார் அவர்கள் நோய் கடுமையாக இருந்த நிலைமையில் சொன்னார்கள்.

நாச்சியார் அவர்களும் அவ்வாறே தருமம் செய்து விட்டார்கள்.

## 55. பெருமானார் அவர்களின் பிரிவு

பெருமானார் அவர்களுக்கு நோய் மிகுந்தும் குறைந்தும் காணப்பட்டது.

ஹிஜ்ரீ பதினோராவது வருடம் ரபீயுல் அவ்வல் மாதம் பன்னிரண்டாம் தேதி திங்கட்கிழமை காலையில் பெருமானார் அவர்களுக்கு வெளித்தோற்றத்தில் உடல் நலமுடன் இருப்பதாகத் தெரிந்தது.

பள்ளிவாசலும் பெருமானார் அவர்கள் இருக்கும் இடமும் ஒன்று சேர்ந்து இருந்ததால் பெருமானார் அவர்கள், திரையை விலகிப் பார்த்தார்கள். அங்கே மக்கள் காலைத் தொழுகையை நிறைவேற்றிக் கொண்டிருப் பதைக் கண்டார்கள். அந்தக் காட்சியைப் பார்த்ததும் பெருமானார் அவர்களுக்கு மகிழ்ச்சி உண்டாகி, புன்முறுவல் செய்தார்கள்.

அப்போது பெருமானார் அவர்கள் பள்ளி வாசலுக்கு வரப்போவதாக எண்ணி, தொழுது கொண்டிருந்த மக்கள் தங்கள் இடத்திலிருந்து விலகிச் செல்ல நினைத்தார்கள். தொழுகையை நடத்திக் கொண்டிருந்த அபூபக்கர் அவர்களும் பின்னடையக் கருதினார்கள். பெருமானார் அவர்கள் சமிக்ஞையினால் அவர்களைத் தடுத்து, திரையைப் போட்டுக் கொண்டார்கள்.

அன்று பகலில், பெருமானார் அவர்களுக்கு மயக்கம் உண்டாவதும் பிறகு தெளிவதுமாக இருந்தது.

அடிக்கடி திருக்குர்ஆன் வசனங்களைப் பெருமானார் அவர்கள் கூறிக் கொண்டிருந்தார்கள்.

அன்று பகல், அபூபக்கர் அவர்களின் மகன் அப்துர் ரஹ்மான் பெருமானார் அவர்களைக் காண வந்தார்: அவர் கையில் பல்விளக்கும் குச்சி ஒன்று இருந்தது. பெருமானார் அவர்கள் அதைக் கூர்ந்து பார்த்தார்கள். அவர்களுடைய பார்வையிலிருந்து, அவர்கள் பல் விளக்க விரும்புவதாகத் தெரிந்தது. உடனே ஆயிஷா நாச்சியார் அவர்கள் தம் சகோதரரிடமிருந்து அக்குச்சியை வாங்கி, அதன் நுனியை மெதுவாக்கிப் பெருமானார் அவர்களிடம் கொடுத்தார்கள். பெருமானார் அவர்கள் அதைக் கொண்டு பல் விளக்கினார்கள். அப்பொழுது பிற்பகல் நேரம், "தொழுகையை ஒழுங்காக நடத்த வேண்டியது. பெண்களிடம் - அடிமைகளிடம் கருணையோடு இருக்க வேண்டும்" என்ற சொற்கள் அவர்களின் வாயிலிருந்து வெளிவந்தன.

அவர்கள் அருகில் தண்ணீர் பாத்திரம் இருந்தது. அதில் அடிக்கடி கையை இட்டு, முகத்தில் தடவிக் கொண்டிருந்தார்கள். பிறகு கைகளை உயர்த்தி, "ஆண்டவனே மேலான தோழன்!" என மூன்று முறை சொன்னார்கள். அவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கும்போது

அவர்களின் கைகள் இரண்டு பக்கங்களிலும் ஒழுங்காய் அமைந்திருந்தன. கண்கள் மூடின. அவர்கள் உயிர் உலகை விட்டு நீங்கிப் பரிசுத்த உலகுக்குச் சென்று விட்டது.

(இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்)

## 56. கடமைகளை நிறைவேற்றிய நபிகள் நாயகம் அவர்கள்!

மனிதத் தந்தையான ஹஸ்ரத் ஆதம்(அலை) அவர்களின் காலத்திலிருந்து, இவ்வுலகை நேர்வழிப்படுத்துவதற்காகக் காலந்தோறும் ஆண்டவன் தீர்க்கதரிசிகள் பலரை அனுப்பி வந்திருக்கின்றான். அவர்களில் கடைசியாகத் தோன்றியவர்கள் பெருமானார் அவர்கள். தங்களுக்குப் பிறகு, உலகுக்குத் தீர்க்கதிரிசிகள் தோன்றுவதற்கு அவசியம் இல்லாதபடி, தங்கள் திருப்பணிகளைச் செவ்வனவே பூர்த்தி செய்துவிட்டார்கள்.

பெருமானார் அவர்கள், உலகத்தில் மனிதர்களின் தோழமையோடிருந்து, அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் சரிவர நிறைவேற்றி, அவர்களை உன்னதமான இடத்தில் உயர்த்தி

வைத்து, பிறகு தாங்களும் "மேலான தோழனான ஆண்டவனிடம்" போய்ச் சேர்ந்தார்கள்.

பெருமானார் அவர்கள், ரபீயுல் அவ்வல் மாதம் பன்னிரண்டாம் தேதி, திங்கட்கிழமை இவ்வுலகில் தோன்றினார்கள். அதே மாதம், அதே தேதி, அறுபத்து மூன்றாவது வயதில் இம்மண்ணுலகைவிட்டு, விண்ணுலகுக்குச் சென்றார்கள்.

பரிசுத்த கஃபாவையும, மனித வாககததை நல்வழிப் படுத்துவதற்காக, இவ்வுலகில் தோன்றிய பெருமானார் அவர்களின் அடக்கத் தலத்தையும் காணும் பாக்கியத்தை ஆண்டவன் ஒவ்வொரு முஸ்லிமுக்கும் அருள்வானாக!

ஒவ்வொரு முஸ்லிமும் பெருமானார் அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடக்க ஆண்டவன் அருள்புரிவானாக!

இந்நூல்...

நபிகள் நாயகம் அவர்களின் வரலாறு என்பது மிகப்பெரிய பொக்கிஷமாகும். மாணவர்களுக்கு நபிகள் நாயகம் அவர்களின் பெருவாழ்வு தனித்தனியாக ஒவ்வொரு சம்பவமாக இனிய எளிய தமிழ் நடையில் 56 நிகழ்ச்சிகளில் தொகுக்கப் பெற்றுள்ளது.